Follow us

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 488 பிலவ வருடம், பங்குனி மாதம் 14ஆம் திகதி திங்கட்கிழமை
(28.03.2022) ஹிஜ்ரி - 1443 ஷஃபான் - 24 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

கமெண்ட் கந்தர்..




## எரிவாயு வரிசைக்கு முடிவில்லை



### மக்கள் அவதி


யோ. தர்மராஜ்

போதிய எரிவாயு இல்லாத காரணத்தினால் நாட்டின் பல பகுதிகளில் தங்களுக்கு தேவையான எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கு....

02 பக்கம்

## 2 இலட்சத்தை அண்மித்த தங்கப்பவுணின் விலை





02 பக்கம்



# அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

### உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரிக்கை

யோ.தர்மராஜ்

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் 95 வீதத்தால் சீர்குலைந்துள்ளன.

எனவே, எதிர்காலத்தில் அரிசிக்கான வரிசைகளையும் காணக்கூடியதாக இருக்கும். மேலும், ஓகஸ்ட் மாதத்திற்கு பின்னர் நாட்டில் அரிசியை 5 மற்றும் 10 கிலோகிராம் பைகளில் கொள்வனவுசெய்ய முடியாது. மாறாக, சிறிய பொலித்தீன் பைக்கற்றுகளிலேயே கொள்வனவு செய்யவேண்டிவரும் என ஒன்றிணைந்த அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## கடலில் மூழ்கிப் பலியான தொழிலாளர்கள் இருவர்

### சிலாபத்தில் நேற்று துயரம்

சிலாபம் மெதவத்தை கடற்கரையில் நடந்த விருந்து ஒன்றில் கலந்துகொண்ட ஒன்பது பேர் கடலுக்கு குளிக்கச் சென்றபோது, அவர்களில் இரண்டு பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

02 பக்கம்

### பின்வரிசை எம்.பிக்களுக்குள் குழப்பம்:

## தனிவழி செல்லும் மற்றுமொரு குழு!

### ஆளுங்கட்சிக்குள் நெருக்கடி உச்சம்

அரசாங்கத்தின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் மீண்டும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 பக்கம்

## நாணய நிதிய அறிக்கை குறித்து விசேட விவாதம்



### ரணிலின் கோரிக்கையை ஏற்றது அரசு

யோ.தர்மராஜ்

சர்வதே நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பாக உடனடியாக நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்துமாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

02 பக்கம்




இந்தியாவில் உள்ள ஆர்.எஸ்.எஸ்.அமைப்பினை போன்று இலங்கையிலும் அமைப்பொன்றை உருவாக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பானது இந்தியாவில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறது. எந்தப் பிரச்சினை வந்தாலும் அந்த அமைப்பானது அதை அரசுக்கு பாதிப்பை தராத வகையில் பார்த்துக் கொள்கிறது. எனவே, அப்படியான அமைப்பினை இங்கும் அமைப்பது அரசுக்கு நல்லதென ஆலோசனை சொல்லப் பட்டுள்ளதாம். ஆனால், இந்த ஆலோசனையை வெளியே சொல்லாமல் உள்ளே வைத்திருக்கவும் மேலிடத்து உத்தரவாம்.

## இரத்மலானையிலிருந்து சர்வதேச விமான சேவை



படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

03 பக்கம்

## புத்தாண்டு சுற்றுலாத் தகவல்கள் சமூக ஊடகங்களில் வேண்டாம்:

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கோரிக்கை

யோ.தர்மராஜ்



தமிழ் - சிங்கள புத்தாண்டின்போது தங்களுடைய பயணங்கள் தொடர்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட வேண்டாம் - என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 பக்கம்

## ஜனாதிபதி கோட்டா பலவீனமானவர்; அவருக்கு முதுகெலும்பு கிடையாது

### குமார வெல்கமவின் கட்சி விமர்சனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் பலவீனமானவர், அவருக்கு முதுகெலும்பு என்பது கிடையாது என்று முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான உபுலாங்கனி மாலகமுவ தெரிவித்தார்.

புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளரும், குமார வெல்கமவின் புதல்வருமான பரிஸ்டர் செனால் வெல்கம அடங்கலான கட்சி உயர்மட்டக் குழு .....

02 பக்கம்

## துன்பமில்லாத ஒருவரின் வீட்டிலிருந்து ஒரு குவளை நீர் கொண்டுவாருங்கள்

### அரசாங்கத்திற்கே சவால் விடுத்தார் முருத்தெட்டுவ தேரர்



நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு வேறொரு அமைச்சுப் பதவி வழங்கப் படவேண்டும் என தெரிவித்துள்ள முருத்தெட்டுவே ஆனந்த தேரர், எதிர்வரும் 31ஆம் திகதி அபயாராமயவில் மகா சங்கத்தினர் இணைந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மரணமே நடக்காத ஒருவரின் வீட்டிலிருந்து கடுகு விதையை கொண்டுவருமாறு கோதமியிடம் சிசா சொன்னதாக பௌத்த வரலாறு சொல்கிறது. அதேபோன்று தற்போது துன்பமே இல்லாத ஒருவரின்..

02 பக்கம்



# சர்வதேசத்தை ஏமாற்ற இலங்கை முயற்சி: மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் நிகழ்த்தப்படும் மீறல்களை உடனடியாக முடிவிற்குக்கொண்டுவருமாறு சர்வதேச சமூகத்தினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவந்த நிலையில், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் மேலோட்டமான திருத்தங்களை நிறைவேற்றியதன் ஊடாக அனைவரையும் ஏமாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மிகமோசமான சரத்துகள் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்களும் ஐக்கிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்மொழியப்பட்ட அந்தத் திருத்தங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, மனித உரிமைகள் அமைப்புகளின் ஆலோசனைகளுக்கு இடமளிக்கக்கூடியவாறான உபக்குழு ஆராய்வை அரசாங்கம் தவறவிட்டுள்ளது.

அதன்விளைவாக, அச்சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கக்கூடியவாறான முக்கிய சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் கடந்த நான்கு வருடகாலமாக நபர்களைத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கும் சிறுபான்மையினத்தவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை இலக்குவைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும்கூட, எவ்வித ஆதாரங்களையும் சமர்ப்பிக்காமல் நபர்களைப் பல வருடங்களுக்குத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு அச்சட்டம் இடமளிப்பதுடன் பிணை வழங்கலுக்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்கின்றது.

அத்தோடு, சித்திரவதைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு ஏதுவான அர்த்தமுள்ள திருத்தங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

தற்போது அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டிற்கும் பணவீக்கத்திற்கும் வழிவகுத்திருக்கக்கூடிய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார நிர்வாகத்திற்கு எதிராகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போது இடம்பெற்றுவரும் மீறல்கள் தொடர்பில் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய அரசாங்கம், சர்வதேசத்திடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுபோன்று காண்பிக்க முயற்சிக்கின்றது.

இலங்கைவாழ் மக்கள் உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டிற்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அவர்களுக்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவைப்படுகின்றது.

இருப்பினும் அரசாங்கம் தமது வெளிநாட்டு பங்காளிகள் நியாயமான மனித உரிமைசார் மறுசீரமைப்புகளையும், மீறல்களையும் முடிவிற்குக்கொண்டுவந்து நீதியை நிலைநாட்டுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# கொவிட் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படும் இடங்கள்

## அரசின் அறிவிப்பு விரைவில்

எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதியின் பின்னர், முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அட்டையை வைத்திருக்க வேண்டியது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி அட்டை கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய பொது இடங்களின் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது நாட்டில் 14.4 மில்லியன் மக்கள் இரண்டு கொவிட் தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். எனினும், 7.7 மில்லியன் பேர் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுள்ளனர். எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக அடுத்த 2 வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு தொற்றுநோய் பிரிவின் பிரதம தொற்றுநோய் நிபுணர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார்.

# ஓமானின் எரிவாயு கப்பல் இலங்கையை வந்தடைந்தது

ஓமானின் கடனுதவியுடன் 3,500 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்றி வந்த கப்பல் நேற்றுமுன்தினம் இரவு (26) இலங்கையை வந்தடைந்ததாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதில் எரிவாயு இறக்கும் பணி நேற்று (27) பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

100,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் நேற்று சந்தைக்கு விநியோகிக்கப்பட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

### 2 இலட்சத்தை...

நாட்டில் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 80ஆயிரத்தை தொட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு செட்டியார் தெருவில் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 180,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 160,000 ரூபாவாகும். டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடும் சரிவை சந்தித்துள்ளமையே உள்நாட்டில் தங்கம் விலை உயர்வடைவதற்கு காரணம் என தங்க நகை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ரஷ்யா - உக்ரைன் போர் நெருக்கடி காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்து வருகின்றது.

அதன்படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை தற்போது 1,958 அமெரிக்க டொலர்களாக உள்ளது.

வார இறுதியில் தங்கத்தின் விலையில் சிறிது சரிவு இருந்தாலும், கடந்த 30 நாட்களில் தங்கத்தின் விலை சுமார் 3 சதவீதம் அதாவது 56 டொலரினால் உயர்ந்துள்ளது.

### கடலில் மூழ்கிப் பலியான...

இந்த சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. இவர்கள் கடலில் மூழ்கும் போது அதனை கண்ட மீனவர்கள் ஒருவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

நுவரெலியா மாவட்டம் நானு ஓயாவை சேர்ந்த மருதை ராமசாமி, விஸ்வநாதன் ஆகியோரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்கள் தும்மலசூரிய கைத்தொழிற் பேட்டையில் இருந்து மெதவத்தை பகுதிக்கு விருந்துக்கு வந்துள்ளனர்.

### பின்வரிசை எம்.பிக்களுக்குள்...

ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்கனவே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் தலையிட்டு அதனை தீர்த்து வைத்தனர்.

இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சில பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படையாக கருத்துகளை வெளியிட்டு வருவதால் மீண்டும் அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாக பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கீழ் போட்டியிட்டு தெரிவான 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாக செயற்படவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவிக்க முடிவு செய்துள்ளனர்.

சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி, நிமல் லங்சா, கெவிந்து குமாரதுங்க, அனுரபிரியதர்ஷன யாப்பா, பிரேமநாத் தொலவத்தை மற்றும் சில இராஜாங்க அமைச்சர்கள் இதில் அடங்குகின்றனர்.

### நாணய நிதிய...

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முன்னாள் பிரதமர் பல முறை கோரிக்கை விடுத்ததுடன், சர்வ கட்சி மாநாட்டிலும் இது குறித்து நிதி அமைச்சருடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று (27) ஊடகங்களுக்கு அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு விவாதமொன்றை நடத்துமாறு ரணில் கோரியுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பாக உடனடியாக நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்த வேண்டும். அறிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் திட்டங்களை முன்வைப்பது அவசியமாகும்.

நிதி உதவியை பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது என அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை ஆளும் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

முன்னாள் பிரதமரின் இந்த கோரிக்கைக்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

### புத்தாண்டு சுற்றுலா...

குற்றவாளிகள் குறித்த தகவல்களை எடுத்துக்கொண்டு அதனை தங்களுடைய தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுபோன்ற தகவல்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவது குற்றச்செயல்களுக்கு பலியாக நேரிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்விடயத்தில் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### எரிவாயு வரிசைக்கு...

விற்பனை நிலையங்கள் முன்பாக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

நாட்டில் கடந்த வாரங்களில் ஏற்பட்ட எரிவாயு தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பினால் மக்கள் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். நாளுக்கு நாள் மக்களின் வரிசைகள் அதிகரித்துச் செல்கின்றதே தவிர, அவர்களுக்கான எரிவாயு விநியோகம் தீர்ந்தபாடில்லை.

**ஞாயிற்றுக்கிழமை இயங்கிய லிட்ரோ**

ஞாயிற்றுக்கிழமைகளில் கெரவலப்பிட்டியவிலுள்ள லிட்ரோ நிறுவனம் மூடப்படும் நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை குறித்த லிட்ரோ நிறுவனம் தங்களுடைய விநியோகத்தை முன்னெடுத்திருந்தது.

**அதிக விலைக்கு விற்றவர்கள் நிறுத்தம்**

லிட்ரோ நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டிருந்த எரிவாயு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த எம்மாத்தகம மற்றும் ஹட்டன் நகரத்தின் லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர்கள் இருவரை சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

**மண்ணெண்ணெய்க்கு அதிகரித்த கேள்வி**

தேவைக்கு ஏற்ற எரிவாயுவுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்களிடையே மண்ணெண்ணெய் பாவனை அதிகரித்துள்ளதால், பல எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய்க்கான வரிசைகளும் அதிகரித்துள்ளன.

**பொருட்களின் விலை அதிகரிப்பை எதிர்த்து போராட்டம்**

நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையினால் நாடளாவிய ரீதியில் மக்கள் தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டதுடன், அரசாங்கத்தை ஆட்சியை விட்டு வெளியேறுமாறும் கோஷம் எழுப்பினர்.

### ஜனாதிபதி கோட்டா...

இரு நாள் விஜயம் மேற்கொண்டு அம்பாறை கரையோர மாவட்டத்துக்கு விஜயம் செய்தது.

உபுலாங்கனி மாலகமுவ நிந்தவூரில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரொம்ப ரொம்ப பலவீனம் ஆனவர். அவர் இராணுவத்தில் இருந்தார் என்பது வேறு விடயம். அவர் ஏனையோரின் உத்தரவு, அறிவுறுத்தல் ஆகியவற்றுக்கு அமையவே அங்கு செயற்பட்டார் என்பதே உண்மை.

அவருக்கு முதுகெலும்பு கிடையாது. ஆனால் தலைக்கனம் அளவுக்கு மிஞ்சி கிடக்கின்றது. எவருடைய சொல்லையும் கேட்டு நடப்பதாக இல்லை. இந்நாட்டை பீடித்த சாபக்கேடாக பெசில் ராஜபக்ஷ இருக்கின்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது நிச்சயமாக ஒரு நன்மதிப்பு இருந்தது. ஆனால் இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது.

நாடு கெட்டு குட்டி சுவராகி கொண்டிருக்கின்றது. ஏதிலிகளாக நாட்டு மக்கள் மாறி கொண்டிருக்கின்றனர். ஆட்சி மாற்றம் ஒன்றே மீட்சிக்கான ஒரே வழி.

ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும். இதற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பொங்கி எழ வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அது ஒரு பாசாங்கு நாடகமே.

அவர்கள் எதையும் தமிழர்களுக்கு வழங்கப் போவதில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் அழைத்து பேசி இருந்தால்கூட ஒரு பேச்சுக்கு அவரை நம்பியிருக்க முடியும்.

எமது கட்சிக்கு இன, மத, மொழி பேதங்கள் கிடையாது. அனைவரும் இந்நாட்டு மக்களே. அனைவரும் மகிழ்ச்சியாக, நிம்மதியாக, சமாதானமாக வாழ வேண்டும். நாம் வரவுள்ள எந்த தேர்தலாக இருந்தாலும் நிச்சயமாக நாடளாவிய ரீதியில் போட்டியிடுவோம் - என்றார்.

### அரிசி தட்டுப்பாடு...

பொலன்னறுவையில் நேற்று (27) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இன்று அரிசியை ஏனைய நாடுகளிடம் பிச்சையெடுத்து உண்ணும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. தேசனப் பசளை, விவசாயம் தொடர்பான அறிவின்மையாலேயே நாட்டில் இன்று அரிசி பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு இன்னும் இரு வாரங்களே இருக்கின்றன. இந்த நிலையில், தேசிய நாட்டரிசி, சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி என்பன 200 ரூபாவை அண்மித்துள்ளது. மேலும் சில அரிசிகள் 200 ரூபாவை தாண்டியும் விற்பனை செய்யப்படுகின்றன. கீரி சம்பா இன்று 300 ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது. புத்தாண்டு காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாவை தாண்டும் என நாங்கள் ஜனவரி முதல் வாரத்திலேயே எச்சரிக்கை விடுத்திருந்தோம்.

இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் 95 வீதம் சீர்குலைந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அரிசிக்கான வரிசைகளையும் காணக்கூடியதாக இருக்கும். மேலும், ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னர் நாட்டில் 5 மற்றும் 10 கிலோ கிராம் அரிசி பைக்கற்றுகளை கொள்வனவு செய்ய முடியாது. மாறாக, சிறிய பொலித்தீன் பைக்கற்றுகளில் அரிசியை கொள்வனவு செய்ய வேண்டிவரும்.

இதேவேளை, இலங்கையை விட 25 வீதம் இரசாயன உரத்தை பயன்படுத்தும் இந்தியாவிடமிருந்தும் 200 வீதம் இரசாயன உரத்தை பயன்படுத்தும் சீனாவிடமிருந்தும் அரிசியை இறக்குமதி செய்வதால் சிறுநீரக நோய்களுக்கு தாக்கம் செலுத்தாதா அல்லது உங்களுடைய சிறுநீரக நோய் தொடர்பான கொள்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதா என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் கேள்வி எழுப்ப வேண்டும்.

இலங்கை அரிசி இறக்குமதி செய்யும்போது தேசிய உற்பத்தி அரிசிகளின் விலை 120 ரூபாவாகவே காணப்பட்டது. ஆனால், இன்று 200 ரூபாவாக காணப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் அரிசியை உரிய முறையில் நாட்டுக்குள் பகிர்ந்தளித்திருந்தால் தேசிய உற்பத்தி அரிசிகளின் விலை 200 ரூபாவிற்கு வந்திருக்காது.

இறக்குமதி செய்யப்படும் அரிசிகளை அமைச்சர்களின் உறவினர்கள் மற்றும் தேர்தலுக்காக செலவு செய்தவர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படும் கொள்கலனை பொலன்னறுவைக்குக் கொண்டு சென்று உள்நாட்டு அரிசி போன்று 170 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றனர். எனவே, சந்தையிலுள்ள அரிசி மாபியாவினாலேயே இன்று அரிசியின் விலை அதிகரித்துள்ளது – என்றார்.

### துன்பமில்லாத ஒருவரின்...

வீட்டில் இருந்து ஒரு குவளை நீர் கொண்டு வருமாறு நானும் இந்த அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நாட்டு அப்பாவி ஏழை மக்களுக்கு இவ்வாறான வலியை ஏற்படுத்த இந்த அரசாங்கம் தயாராக இருந்தால் நாமும் பாத யாத்திரையாக சென்று இந்த அரசாங்கத்தை உடனடியாக அனுப்ப வேண்டிய இடத்திற்கு கொண்டு செல்ல நேரிடும் என்பதனை தயக்கத்துடன் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தையும் மேற்பார்வையையும் மீண்டுமொருமுறை பொறுப்பேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக செயற்படுவார். நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு வேறு ஒரு அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும். அதற்கான படிகள் என்ன என்பது தொடர்பில் 31ஆம் திகதி மகா சங்கத்தினர் அபயராமயவில் கலந்து கொண்டு தீர்மானம் எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார் 0777983308

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வெறும் 1000/= மட்டுமே...

அழையுங்கள் 0761393805

தமிழன் வாசகர்களே!

தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை www.thamilan.lk ஊடாக மாத்திரமின்றி www.thamilannews.com மூலமாகவும் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்

தமிழன் தமிழன்

# இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் 54 வருடங்களின் பின்னர் சேவைகள் ஆரம்பம்





(அஷ்ரப் ஏ சமத்)

இரத்மலானை விமான நிலையம் 54 வருடங்களுக்குப் பிறகு கொழும்பு சர்வதேச விமான நிலையம் என பெயரிடப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று (27) திறந்து வைக்கப்படடது.

இந்நிகழ்வில் சிவில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க, சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, மாலைதீவிலிருந்து வருகைதந்த சிவில் விமானப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அஹமட் சுஹைல் மற்றும் மாலைதீவு, இலங்கை நாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள், இலங்கை விமான நிலைய அதிகாரிகளும் மற்றும் மாலைதீவு எயார் விமான நிலைய அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், கொழும்பு - மாலைதீவு முதலாவது மாலைதீவு எயார் விமானம் ஒன்று 50 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு நேற்றுக்காலை 09 மணிக்கு கொழும்பு சர்வதேச விமான நிலையமான இரத்மலானையை வந்தடைந்தது.

மாலைதீவு சிவில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அஹமட் சுஹைல் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் எம்.சாதிக் உட்பட அதிதிகளும் முதலாவது விமானத்தில் முதலாவது பிரயாணிகளாக வந்திறங்கினார்கள்.

இலங்கையில் மிகப் பழமைவாய்ந்ததும் முதலாவது விமான நிலையமான இரத்மலானை விமான நிலையம் 70 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 54 வருடங்களுக்குப் பிறகு கொழும்பு சர்வதேச விமானநிலையம் என மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மாலைதீவு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அப்துல் சுஹையி, ''இங்கு உரையாற்றுகையில், 12 ஆயிரம் மாலைதீவு நாட்டவர்கள் இரண்டாவது வதிவிடமாக களுபோவில, தெஹிவளை - கல்கிஸை பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். எதிர்வரும் வாரம் முஸ்லிம்களது புனித நோன்பு ஆரம்பிக்கின்றபடியால் அநேகமான மாலைதீவினர்கள் தமது நாட்டுக்குச் சென்றுள்ளனர். ரமழான் நேன்பின் பின்னர் வாரத்தில் 2 அல்லது 3 முறைக்கேனும் இந்த விமான சேவைகள் நடைபெறும்'' எனக் கூறினார்.




படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில், இரத்மலானை விமான நிலையம் கடந்த 54 வருடங்களுக்குப் பிறகு தேசிய விமான நிலையமாக அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளது. தெஹிவளை, கல்கிஸை, நுகேகொடை பகுதிகளில்ல் கல்வி பயில்வதற்காகவும் , சுற்றுலாத்துறை, வைத்தியம் ஆகியவற்றுக்காக 12 ஆயிரம் மாலைதீவு மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மாலைதீவினர் நாளாந்தம் தமது நாடுகளுக்கு பிரயாணங்களை மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் இந்தியா போன்ற நாடுகளின் சிறிய விமானங்கள் வந்து இறங்குவதற்கும் வசதிகள் செய்துகொடுக்கப்படும். கொவிட் தொற்று நோய் காரணமாக கடந்த 6 மாதங்களுக்கு முன் சகல விமான நிலையங்களும் மூடி வைக்கப்பட்டன. அந்த நிலையிலும் பொருளாதாரத்தில் இலங்கை பின்னடைவு அடைந்தாலும் இன்று (நேற்று) இந்த விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதையிட்டு நாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் உள்ளிட்ட விமான சேவை அதிகாரிகளையும் பாராட்டுவதாகவும் தெரிவிததார்.

## அமைச்சர் லொக்குகேவின் சாரதி கொலை

# பாடசாலை மாணவன் சந்தேகத்தில் கைது

அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதியை கொலைசெய்த சம்பவம் தொடர்பில் தேடிவந்த மற்றுமொரு சந்தேகநபரான பாடசாலை மாணவர் ஒருவர் கல்கிஸை வலய குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய மாணவனே பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் (26) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்புக் கெமராக்களின் காட்சிகளினூடாக பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலை நடந்த தினத்தன்று அவர் பயணித்த மோட்டார்சைக்கிளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாவித்தர பிரதேசத்தில் கடந்த 21ஆம் திகதி, அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதி தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்ததுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இதற்கு முன்னர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாவப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான சாபமே ஒவ்வொரு வீட்டிலும் கேட்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



பாவப்பட்ட இந்த அரசாங்கத்திற்கு எதிராக வீடு வீடாக சாபங்களே கேட்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அந்த சாபம் பட்டினியால் வாடும் மக்களின் சாபம். குழந்தைகள் அழும் வலியை தாங்க முடியாத பெற்றோர்கள் வெளிப்படுத்தும் சாபம். அந்த சாபம்தான் படிப்பை இழந்த குழந்தைகளின் சாபம். அந்த சாபம்தான் வேலையிழந்து வாழ்வின் மீது நம்பிக்கையை இழந்த இளைஞர்களின் சாபம். பாழடைந்த நெல் வயல்களைப் பார்த்து விவசாயிகளிடமிருந்து வரும் அந்த சாபம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயாவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதான தலைமை தேரர், திஸ்ஸமஹாராம சாசனாரக்ஷக செயற்குழுவின் தலைவர், திஸ்ஸமஹாராம மெனிக் ரஜமஹா விகாரையின் பிரதம தலைமை தேரர், வணக்கத்துக்குரிய தங்காலை ஜினரதன நாயக்க தேரரின் 70ஆவது பிறந்த நாளில் அவரது எண்ணக்கருவிற்கு ஏற்ப விகாரை வளாகத்தில் புதிய விகாரை தாது கோபுர கட்டிட அடிக்கல் நாட்டும் பணி இன்று ஆரம்பித்துவைக்கப்பட்டதோடு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதற்கான நிதியுதவி பங்களிப்பையும் நன்கொடையாக வழங்கினார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அச்சமின்றி சந்தேகமின்றி ஒரு மணித்தியால மின்சாரத்தை வழங்க முடியாத நிலைக்கு இந்நாடு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்னும் சில நாட்களில் புத்தாண்டு காலம் வரவுள்ளதாகவும், எமது நாட்டில் சௌபாக்கியத்தின் மாதத்தை கொண்டாடுவதற்காக சீனாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்நாடு மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களை துன்புறுத்தி, அசௌகரியங்களுக்குட்படுத்தி நாட்டின் தேசிய வளங்களை விற்கும் நடவடிக்கையை தற்போது அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வான் பரப்பையும் விற்ற அரசாங்கமாக இந்த அரசாங்கம் வரலாற்றில் இடம்பிடித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெங்காய வெடியில் சிக்கி உயிருக்குப் போராடும் யானை

# வவுனியாவில் அதிகாரிகள் சிகிச்சைக்கு ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)



வவுனியா சமனங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஆச்சிபுரம் முதலாம் ஒழுங்கை பகுதியில் விவசாய காணியில் நோய்வாய்ப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் காட்டு யானை யொன்று காணப்பட்டுள்ளது.

இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் உடனடியாக வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கியமையினையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வருகை மேற்கொண்டு குறித்த யானையின் நிலைமையினை பார்வையிட்டதுடன்', யானையின் வாய் உட்பகுதி பாதிக்கப்பட்டதையும் அவதானித்தனர்.

அதன்பின்னர் நேற்று (27) காலை 10 மணியளவில் வடமாகாண வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை வைத்திய அதிகாரி பாலச்சந்திரன் கிரிதரன் அவ்விடத்திற்கு வருகை தந்து யானையினை பார்வையிட்டதுடன், யானை வெங்காய வெடியை உண்டதால் வெடி வெடித்து யானையின் வாய் உட்பகுதி பாதிக்கப்பட்டதனால் உணவு உட்கொள்ள முடியாமல் போனதால் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் யானையின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

யானைக்கு வழங்கப்பட்ட மருத்துவ உதவியின் பின்னர் யானையினை காட்டுக்குள் அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கையில் வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

# பெற்றோலை பெற்றுக்கொள்ள வவுனியாவில் நீண்ட வரிசை




(வவுனியா செய்தியாளர்)

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தில் அனைத்து ரக பெற்றோல் வகைகளின் விலைகளும் லீற்றருக்கு 49 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதையடுத்து வவுனியா மாவட்டத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களினை மக்கள் நாடிவருகின்றமை அதிகரித்துள்ளது.

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக, வேப்பங்குளம் 8ஆம் ஒழுங்கை அருகில், ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்களை பொதுமக்கள் நாடி வருகின்றனர்.

மக்களின் நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் அநுராதபுரத்தில் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)



ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த பெண் சந்தேக நபர் ஒருவரை பொலன்னறுவை வலய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று மாலை சிரிபுர பொலிஸ் பிரிவிலுள்ள தமனேவெவ நுவரகல பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது பெண் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 5 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 39 வயதுடய நுவரகல பகுதியை வசிப்பிடமாகக்கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவ வலய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



அறுபதாவது உலக நாடக தினத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) காலை டவர் ஹோல் நிதியத்தின் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் நடைபெற்ற சோமலதா சுபசிங்ஹவின் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட "சிறுவர்கள் என்றாலும் இப்ப விளங்குது" "தொப்பி வியாபாரி"எனும் இரு நூல்களின் சிறப்பு பிரதிகளை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் அமைச்சரிடமிருந்து பெறுவதையும் அமைச்சின் செயலாளர் திருமதி நிசாந்தி ஜயசிங்க டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.எஸ்.திசாநாயக்க ஆகியோர் உடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

# பெரமுன எம்.பியால் தாக்கப்பட்ட மாணவர் வைத்தியசாலையில்

## குளியாப்பிட்டியில் சம்பவம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் நாடாளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் தன்னை தாக்கியதாக சட்டம் பயிலும் மாணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

குளியாப்பிட்டியில் உள்ள பாடசாலையொன்றின் முன்னால் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இவ்வாறு தாக்கப்பட்ட மாணவர் குளியாப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். முதலில் நாடாளுமன்ற உறுப்பினர் தனது நண்பனை தாக்கினார் என்றும் பின்னர் தன்னை தாக்கினார் என்றும் அவரது பாதுகாப்புப் பிரிவை சேர்ந்தவர்களாலும் தாக்கப்பட்டதாகவும் மாணவர் தெரிவித்துள்ளார்.

நாரம்மல கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தல் இடம்பெற்றபோது அந்த பகுதி மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே இருதரப்பினருக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் தாக்கியதாக தங்களுக்கு வேறு சிலரும் முறைப்பாடு செய்துள்ளனதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான ஐவர் குளியாப்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

2022/03/18

அட்டோர்னி பலபதத்தை மாற்றுவது

En மொரகாட்டிய எண் 3012 இல் வசிக்கும் தேசிய ஹேதுனும்பத் எண் எண் எண் 198105901005 ஹெட்டி ஆராச்சியின் வளங்கள் சுரங்க வன மா மூலம் 2019.04.01 நாள் எண் எண் 1833 இல் வசிக்கும் தரண எழுதும் பெரிசித்த நோதாரிஸ் குடியமர்த்தப்பட்ட துங்கமதீ துங்கமதீ 3012 இல் வசிக்கும் துங்கமடீ துங்கமதீ 2018 ஆம் ஆண்டு 80 ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டு 20.01. சிறிய விதானத்தின் அலைக்கற்றை சங்ககாலனி திலரத்ன மத்மியத்திற்கு உண்டான அட்டோர்னி அதிகாரம் செயலிழந்த கர பர்சிட் செய்யும் பா ஷி அனைத்து மக்களும் அறிந்து கொள்வதற்காக பகாஷ செய்வோம் நாம் செய்ய வேண்டும்

ஹெட்டி ஆசிரியரின் வளங்கள் சுரங்க (அடோர்னி அதிபதி)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 28ஆம் திகதி, திங்கட்கிழமை

# நாட்டை மீட்கவுள்ள ஒரே வழி

இலங்கையில் புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள யோசனைகளை அரசாங்கம் ஆராயவுள்ளது - என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியம் தொடர்பான யோசனை குறித்து மேலும் ஆழமாக ஆராயவேண்டியுள்ளதென நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் வங்கித்துறை உட்பட வழமையான வழிமுறைகள் ஊடாக இடம்பெறவேண்டும். அவற்றிற்கு வெளியே இது இடம்பெற முடியாது என நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரும் நாங்கள் சில சலுகைகளை வழங்கினோம். ஆகவே, அதனைபோன்று வரிச்சலுகைகள் வழங்கப்படலாம். புலம்பெயர்ந்தவர்கள் இங்கு முதலீடு செய்தால் நீண்டகால குத்தகைக்கு நிலங்களை அரசாங்கம் வழங்கலாம். உலகின் பல பகுதிகளிலும் இலங்கையிலும் இது இடம்பெறுகின்றது

இதற்கான பொறிமுறைகளை உருவாக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது குறித்து மேலதிக பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி மேற்கொள்வார். அதன்பின்னர் இந்த விடயம் அமைச்சரவையில் ஆராயப்படும் என்று குறிப்பிட்டுள்ளார் நீதியமைச்சர்.

பொருளாதார நெருக்கடியால் திக்குமுக்காடும் இலங்கை, இப்போது புலம்பெயர் தமிழர்களையும், அமைப்புகளையும் அழைத்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றே. இதில் தவறு இல்லை. புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் பிறந்தவர்கள். கடந்த காலங்களில் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு அவர்கள் ஆதரவளித்திருக்கலாம். ஆனால், அதற்காக அவர்களை தேசத்துரோகிகளாக சீல் வைத்துவிட முடியாது. இலங்கை மத்திய வங்கியை சூறையாடினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட பிரமுகர்களே சுதந்திரமாக நடமாடும்போது, இன உணர்வுக்காக ஆதரவளித்தவர்களை ஒதுக்கிவைத்துவிட முடியாது.

நாட்டின் நிலைமையைப் பற்றி ஆழமான பொருளாதாரப் பகுப்பாய்வைச் செய்தால், நாட்டின் தற்போதைய பொருளாதார அவலத்திற்கு கொவிட் பெருந்தொற்று மாத்திரம் காரணம் அல்ல.

பல தசாப்தங்களாக நாட்டில் நிலவும் இன நெருக்கடியை, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கொள்கை, அணுகுமுறை மற்றும் தவறான நிர்வாகக் கையாளுகையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான காரணம்.

சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட அரசாங்கங்கள், அரசியல் பிரச்சினைக்கு ஜனநாயகமற்ற தீர்வுகளை தேர்ந்தெடுத்தன. உண்மையில், அதுவே இன்றைய பேரழிவுகரமான கடன் நெருக்கடிக்குள் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது. வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், பல தசாப்தங்களாக சிங்கள - பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்துடன் நடத்தப்பட்ட யுத்தமானது, இன்று நாட்டின் அனைத்து சமூக மக்களினதும் தோள்களில் ஒட்டுமொத்த பொருளாதாரச் சுமையையும் சுமத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னருங்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை. போரை முடிவுக்குக் கொண்டுவந்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் எவ்வளவோ விடயங்களைச் செய்திருக்கலாம். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வொன்றை நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் காணப் போவதாக முன்னாள் ஜனாதிபதியும் இப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் உட்பட பல்வேறு சர்வதேச தலைவர்களுக்கும் உறுதியளித்திருந்தார். அவர் அதனைச் செய்திருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்த்திருப்பார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் மிக சக்திவாய்ந்த மனிதராக இருந்தபோது, 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு காண விரும்பாவிட்டாலும், குறைந்தபட்சம் 13ஆவது திருத்த வரைபை, அதன் ஆரம்ப அசல் வடிவிலேயே முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அதற்கான துணிவு அவருக்கு இருக்கவில்லை. நாட்டில் முதலீடு செய்வதற்கு பெரும் ஆற்றலுடன் இருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ் மக்களுக்கு உரிய இடத்தினை வழங்க அரசாங்கம் முன்வராததால் விலகி நிற்க முனைந்தனர்.

நாட்டில் கடந்த காலங்களில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் வந்த புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கடுமையான விதிமுறைகளைக் கடந்து அரசாங்கத்தின் சிங்கள அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மேம்படுத்தப்பட்ட இந்த அதிகாரிகளின் சிங்கள - பௌத்த பெரும்பான்மை மனோநிலை, அந்த முதலீட்டாளர்களின் பெரும் உற்சாகத்தை பாரியளவில் சிதைத்துவிட்டது. முதலீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட தாங்கமுடியாத மற்றும் சட்டத்திற்குப் புறம்பான சுமைகள் அவர்கள் தங்கள் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது .

இந்தப் பின்னணியில் தமிழ் மக்களின் சுயநிர்ணய ஆட்சிமுறை என்கின்ற நீண்டகால அபிலாசையை பூர்த்திசெய்யக்கூடிய ஒரு நிரந்தர தீர்வை எட்டும்வரை, ஒரே நாட்டிற்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான பரிந்துரையாக குறைந்தபட்சம் ஏற்கனவே அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தை அதன் ஆரம்ப வடிவிலேயே, முழுவதுமாக செயல்படுத்துவதே தற்போதைய பொருளாதார அவலநிலையிலிருந்து நமது நாட்டை மீட்பதற்கான ஒரே வழி.

# நன்றே செய்வோம் இன்றே செய்வோம்!

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் காலையில் உறக்கம் கலைந்து எழுகையில், இன்று இந்த இந்த வேலைகளை செய்துமுடிக்க வேண்டும். அதாவது வீட்டில், அலுவலகத்தில் இந்தப் பணியை முடிக்க வேண்டும், இவரைப் பாராட்ட வேண்டும், இவருக்கு குறுஞ்செய்தி, அவருக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும், அந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும், அவரைச் சந்திக்க வேண்டும், அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றெல்லாம் நினைப்போம். ஆனால், நாம் நினைத்தபடி அந்த குறிப்பிட்ட நாளில் அவற்றை செய்து முடித்திருப்போமோ என்றால், நிச்சயமாக அதில் பாதி வேலையைக்கூட முடித்திருக்க மாட்டோம்.

ஒருவர் மனதில் எழும் எண்ண அலைகளை நிர்ணயம் செய்து வடிவமைத்து முடித்துவைப்பது அன்றைய நாளின் நிகழ்வுகளே. நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நொடியும் பொருளுடையதாகவும், மற்றவர்களுக்குப் பயனுடையதாகவும் இருக்கவேண்டும். ஒரு நல்ல செயலை இன்றே செய்யாமல் நாளை செய்யலாம் அல்லது நாளை மறுநாள் செய்யலாம் என்று தள்ளிப்போட்டால் அச்செயல் நினைத்தபடி நிறைவேறாது. காரணம், நம்மிடையே காணப்படும் மறதியும், தீமையை நன்மைபோல் காட்டும் இரட்டை மனமும்தான்.

ஒரு நற்செயலை நாளை செய்யலாம் என்று தள்ளிப்போட்டால் அது நாளைக்கு நிறைவேறும் என்பது நம் கையில் இல்லை. எனவே, எச்செயலைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் உடனே அதைச் செய்வதற்கு இறங்கிவிட வேண்டும்.

''ஒவ்வொரு நாளும் முடிந்துவிட்டால் அந்த நாள் மீண்டும் கிடைக்காது. ஆகையால், முடிந்ததையே எப்போதும் நினைத்துக்கொண்டிருந்து கவலை என்னும் குழியில் விழவேண்டாம். இன்று நாம் புதிதாய் பிறந்தோம் என்று நினைத்துக்கொண்டு, நல்ல எண்ணங்களை நமக்குள் புதிதாய் விதைத்து வாழ வேண்டும். அப்படி செய்கையில் நம் தீமைகள் அனைத்தும் அழிந்து போகும்'' என்று கூறுகிறார் மகாகவி பாரதியார்.

நாளை நாளை என்று வேலைகளைத் தள்ளிப்போடுவதால் ஏராளமான வேலைகள் நம் முன் வளர்ந்து நின்றுவிடும். அவற்றை முடிக்க முடியாமல் நாளை நாளை என்று தள்ளிப் போட்டு, பின்னர் இவ்வளவு வேலையா என்று மலைத்துவிடுவோம். அவற்றை முடிக்க வேண்டும் என்கிற முயற்சி இறுதியில் தோல்வியில் முடியும். அதேபோன்று நாம் நமது கடமைகளை அன்றே முடித்துவிட வேண்டும். பின்னர் செய்யலாம் என்று தள்ளிப்போட்டால் அது செய்ய முடியாமலே போவதுடன், அதனால் நாம் அவப்பெயரையும் சந்திக்க நேரிடும். எனவே, இன்று செய்ய நினைத்த நல்ல செயல்களை இன்றே செய்து முடித்துவிட வேண்டும்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்றும் பெருமை உடைய இவ்வுலகில், எந்தச் செயலும் உரிய காலத்தில் செய்யப்பட வேண்டும். பருவம் தவறிய பின் செய்யப்படும் செயல்கள் சிறப்பாக அமையாது. அதனால்தான் நம் முன்னோர் 'பருவத்தே பயிர் செய்' என்று கூறினர். அந்தந்த நேரத்தில் அந்தந்த செயல்களை செய்தால்தான் அச்செயல் இனிதே நிறைவுறும்.

காலமும், கடல் அலைகளும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்று கூறுவார்கள். இந்த உண்மையை ஒரு முதியவர் தன் மகனிடமிருந்தே கற்றுக்கொள்ள நேர்ந்ததாக 'மகாபாரதம்' கூறுகிறது. மகனான அந்த இளைஞன் கூறினான், ''இது நடந்துவிட்டது. இது இனி நடைபெற வேண்டும். இது பாதி முடிந்திருக்கிறது. – இப்படியெல்லாம் நினைத்தபடி காலம் கடத்துபவனை மரணம் மாய்க்கிறது. எல்லாம் காலத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது'' என்கிறான்.

கடந்த நாள், கடந்த நாளே. அது இனி திரும்பி வராது. நாளை என்பது நம் கையில் இல்லை. நாளை என்பது இன்றின் தொடர்ச்சியே. அதாவது, எதிர்காலத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. எனவே, நல்ல செயல்களை அன்றே செய்யாமல், நாளை செய்யலாம், நாளை செய்யலாம் என்று தள்ளிப்போடக் கூடாது. செய்ய நினைத்த அன்றே செய்து முடித்துவிட வேண்டும்.

''நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். அதில் ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை'' என்று கூறினார் சுவாமி விவேகானந்தர். எனவே, ஒரு நாளில் கடக்கின்ற ஒவ்வொரு விநாடியும், நம் வாழ்நாளின் ஒரு பகுதி என்பதை நாம் உணர வேண்டும். ஏனெனில், ஒருவருக்கு இறப்பு என்று வரும், எப்படி வரும் என்பதெல்லாம் நமக்கு மட்டுமல்ல, யாருக்குமே தெரியாது. இறப்பு என்பது மனிதர்களால் தவிர்க்க முடியாதது.

'யாரறிவார் சாநாளும் வாழ்நாளும்' என்கு கூறுகிறது திருமுறைப் பாடல் ஒன்று. ஒன்றே செய்ய வேண்டும்; ஒன்றும் நன்றே செய்ய வேண்டும்; நன்றும் இன்றே செய்ய வேண்டும்; இன்றும் இன்னே - அதாவது, இப்பொழுதே செய்ய வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு. நல்லவற்றைச் செய்யாமல் 'நாளை நாளை என்பீராகில் நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்' என்கிறது கபிலர் அகவல்.

எச்செயலைச் செய்வதற்கும் நாளை நாளை என்று காலத்தைக் கடத்தக்கூடாது. சென்ற காலம் சென்றுவிட்ட காலம்தான். அது இனி திரும்பி வரக்கூடியதல்ல. எதிர்காலம் என்பது நாம் அறுதியிட்டுக் கூறக்கூடியதல்ல. ஐயப்பாட்டிற்குரியது. இன்று என்பது மட்டும்தான் உண்மையானது. நாளை என்பதுகூட இன்று ஆன பின்தான் உண்மையாகிறது. நேற்று என்பது, இனி வராது என்பது எவ்வளவு உண்மையோ, நாளை என்பதும் வராது என்ற உண்மையையும் நாம் உணர வேண்டும்.

அதனால்தான், எதிர்காலத்தை ஆன்றோர் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். பொறுமையாக இருப்பது நன்றுதான். ஆனால், அதுவே சோம்பலாகிவிடக் கூடாது. நாளை என்பது நம் கையில் இல்லை. நாளை நடப்பதை யாரறிவார்? வெற்றியை நோக்கிய நமது பயணத்தில் நாளை என்பது தடைக்கல்லாக இருக்கக்கூடாது.

நாளை வரட்டும் என்று காத்திராமல், இன்று வாழ்வதே உண்மை வாழ்க்கை. நாளைய நம் எதிர்காலத்தை நிர்ணயிப்பதும் இன்றுதான். இதனை உணர்ந்துகொண்டு, நாளை நம்மால் எல்லோருக்கும் பயனடையும் வகையில் இன்றே பணியாற்றத் தொடங்குவோம்.

**பாறப்புறத் இராதாகிருஷ்ணன்**
**நன்றி - தினமணி**

## தவக்கால சிந்தனை



### சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படாத இறைவாக்கினர்கள் !

சொந்த ஊரில், சொந்த வீட்டில், ஏன் சொந்த நாட்டில் ஏற்பிசைவும், பாராட்டும் பெறாத பலரை நாம் பார்த்திருக்கிறோம். எத்தனையோ கலைஞர்கள், படைப்பாளர்கள், அறிவியலாளர்கள் தக்க ஊக்குவிப்பு இல்லாததால், சோர்வடைந்து அடங்கிப் போவதைப் பற்றியும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒருவேளை நமக்கே கூட அத்தகைய அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். என்ன காரணம்?

ஒருவர் நமக்குத் தெரிந்தவராக இருப்பதனாலேயே அல்லது அவரது பிறப்பு, குடும்பப் பின்னணி, சில கொடுமையான நேரங்களில் ஒருவரின் சாதி– இவற்றைக்கொண்டு அவரைப் பார்ப்பதாலேயே அவரது திறன்களை, ஆற்றல்களை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

நமக்குக் குழந்தைகளின் பார்வை அல்லது இறைவனின் பார்வை தேவை. குழந்தைகள் தாம் எந்தப் பின்புலமும், பின்னணியும் இன்றி, முற்சார்பு எண்ணங்கள் எதுவுமின்றி பிறரை, நிகழ்வுகளை, இயற்கையைப் பார்க்கின்றனர், வியக்கின்றனர், ரசிக்கின்றனர், பாராட்டுகின்றனர், இறைவனும் அவ்வாறே.

நாமும் நமது முற்சார்பு எண்ணங்களைக் களைந்து, மாந்தரை அவரது இயல்பை, திறன்களை மட்டும் கண்டு பாராட்ட முன்வருவோம்.

## நக்கல் நமசிவாயம்


முந்தி புதுவருச வாழ்த்தை வரிசையா போய் வாழ்த்துவம்...இந்த வருஷம் வரிசையில் இருந்து வாழ்த்தப் போறம்...



## இன்றைய நாளில்...

* 1910 – கடல் விமானம் ஒன்றில் பறந்த முதலாவது மனிதர் என்ற சாதனையை பிரான்சைச் சேர்ந்த என்றி பாப்ரி என்பவர் பெற்றார்.
* 1930 – கொன்ஸ்டன்டினபில், அங்கோரா ஆகியன இஸ்தான்புல் மற்றும் அங்காரா எனப் பெயர் மாற்றம் பெற்றன.
* 1946 – பனிப்போர்: அணுக்கரு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை ஐக்கிய அமெரிக்கா வெளியிட்டது.
* 1959 – சீன மக்கள் குடியரசின் அரச மன்றம் திபெத் அரசைக் கலைத்தது.
* 1970 – மேற்கு துருக்கியை நிலநடுக்கம் தாக்கியதில் 1,086 பேர் உயிரிழந்தனர்.
* 2005 – இந்தோனேசியாவின் சுமத்திராவில் இடம்பெற்ற 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 915 முதல் 1,314 பேர் வரையானோர் உயிரிழந்தனர்.

## மூளையின் அளவைக் குறைக்கும் குடி?



குடிப்பது புத்தியை மழுங்கடிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது, குடியால் எந்தளவுக்கு மூளை பாதிக்கப்படும் என்பதை, அறிவியல் அளந்து சொல்லியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள், 36 ஆயிரம் பேரின் மூளையின் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் படங்களை வைத்து குடியால் மூளைக்கு ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்தனர்.

தினமும் இரண்டு கப் பியர் அல்லது இரண்டு குவளை வைன் அருந்துபவருக்கு, மூளையின் கட்டமைப்பிலேயே மாறுதல் ஏற்படுவதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அதுமட்டுமல்ல, தினமும் இரண்டு குவளை முதல் நான்கைந்து குவளை மது அருந்துவோருக்கு மூளையின் அளவு கணிசமாக குறைந்துவிடும் என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எந்தளவுக்கு? சராசரி நபருக்கு 10 ஆண்டுகள் வயது கூடும்போது, அதற்கேற்ப மூளையின் அளவு குறையும். ஆனால், தினமும் நான்கு குவளை மது குடிப்பவருக்கு அதே அளவு மூளை குறைவு சில ஆண்டுகளிலேயே ஏற்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதுவரை குடிப்பழக்கத்திற்கும், மூளை பாதிப்புக்கும் உள்ள தொடர்பு குறித்து நடத்தப்பட்ட மிகப் பெரிய ஆய்வு இது. இதற்கு முன்பு சில நூறு பேர்களுக்கு இடையேதான் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எப்படி பார்த்தாலும், குடிப்பழக்கம் உள்ள நபருக்கு மூளை நாளடைவில் பாதிக்கும் என்பது உறுதி.

# மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதற்கான தடைகளை நீக்குங்கள்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்பு



மின்சார நெருக்கடிக்கு தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதில் உள்ள தடைகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவிடம் கடந்த வெள்ளிக்கிழமை (25) பணிப்புரை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இந்த அமைச்சகத்திற்குரிய தேசிய திட்டமிடல் துறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொள்கை கற்கைகள் நிறுவனம், நிலையான அபிவிருத்தி சபை, கட்டுபாட்டாளர் நாயகம் அலுவலகம், மதிப்பீட்டுத் திணைக்களம், இலங்கை கணக்குகள் மற்றும் தணிக்கை தரநிலைகள் கணக்கெடுப்பு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் பயனாளிகள் சபை ஆகிய நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

எரிபொருளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்திற்கு 60 ரூபாவுக்கு மேல் செலவாகும் என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரம் குறைந்தபட்சம் 20 ரூபாவுக்கு கிடைக்கும் என்றும் தெரியவந்தது.

அதற்கமைய மின் நெருக்கடியைத் தீர்க்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைத் தவிர வேறு வழியில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் தேவை ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ள 28,200 ஜிகாவோட் மணிநேரத்தில், 19,800 ஜிகாவோட் மணிநேரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் தற்போதைய அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள 70சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்துவதற்கு தற்போது அமுலிலுள்ள மின்சார சபையின் 1969 சட்டத்தை திருத்தி தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பிரதான விநியோகத்துடன் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போதைய மின் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் எனவும், மின்சார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தடையில்லா மின்சாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் 22 மில்லியன் சனத்தொகையில் சுமார் 6 மில்லியன் மக்கள் சமுர்த்தி சலுகைகளைப் பெறுகின்றனர். இதற்காக மாதாந்தம் சுமார் 62 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக தெரியவந்துள்ளது.

சமுர்த்தி பெற வேண்டியவர்களுக்கு உண்மையில் சலுகைகள் கிடைக்கவில்லை எனவும் தேவையில்லாதவர்கள் சமுர்த்தி பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்தி முன்னேற்றத்தை அளவிடும் தரவுகள் 46 குறிகாட்டிகள் மட்டுமே எனவும், அது இதுவரை 105 குறிகாட்டிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தரவு அடிப்படையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை தற்போது 10ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, மேலதிக செயலாளர்களான ஏ.விமலவீர, டி.கே.விஜேசிங்க, பிரதமரின் சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, சனத்தொகை கணக்கெடுப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி அனுரகுமார, கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், கே.ஏ.ரம்யா காந்தி, அரசு மதிப்பீட்டுத் துறையின் முதன்மை மதிப்பீட்டாளர் பி.பி.டி.எஸ். முத்துக்குமாரண, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எச்.டபிள்யூ.ஏ.குமாரசிறி, நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சபரமது, கொள்கை கற்கை நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி துஷினி வீரகோன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



**கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க இலங்கை சின்மயா மிஷன் அமைந்துள்ள 10ஆவது ஒழுங்கையை "சின்மயா ஒழுங்கை" எனப் பெயர் மாற்றம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவரது சமூகப் பணிகள் தொடர்பான செயல்திட்டங்கள், பொரளை கனத்தை "இந்து மயானம்" மீள புனரமைப்பது தொடர்பில் மேற்கொண்டு வரும் செயல்திட்டம் என்பவற்றை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், ஒண்டாரியோ மாகாணத்தின் அமைச்சரும் ஸ்காபுறோ வடக்கு தொகுதி மக்கள் பிரதிநிதியும் தமிழர்களின் நெருங்கிய நண்பருமான றேமட்சோ வழங்கிய பாராட்டுச் சான்றிதழை சென்னையில் நடைபெற்ற "பகிர்வோம் பாராட்டுவோம்" நிகழ்வில் கனடா உதயன் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆர்.என். லோகேந்திர லிங்கம் முன்னிலையில் தமிழக சுற்றுலாத்துறை தொழிலதிபர் வி.கே.டி. பாலன் வழங்கிவைத்தார்.**

## எரிவாயு விநியோக வாகன ஊழியர்கள் மீது தாக்குதல்

*(பலாங்கொடை செய்தியாளர்)*

எரிவாயு விநியோகத்துக்காக சிலிண்டர்களுடன் வந்த வாகனத்துக்கும் அதன் சாரதி மற்றும் உதவியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பலாங்கொடை நகர எரிவாயு விநியோக நிலையம் ஒன்றின் முன்பாக இடம்பெற்றுள்ளது.

எரிவாயு நிரப்பப்பட்டிருந்த வாகனம் சிலிண்டர்களுடன் விநியோக நிலையத்தின் முன்பு நிறுத்தப்பட்டபோதிலும் அங்கு நீண்ட வரிசையில் நின்ற அனைவருக்கும் அதனை விநியோகிக்கப் போதுமானதாக இல்லாமையால் வாகனத்தின் சாரதி வாகனத்தைத் திருப்பி எடுத்துச் செல்ல முயற்சித்தார்.

எனினும் அங்கு திரண்டிருந்த மக்கள் கோபத்துடன் அவர்கள் மீதும் வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்த ஆரம்பித்தபோது அவ்விடத்துக்கு வருகை தந்த பலாங்கொடை பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர்.

இதனையடுத்து வரிசையில் நின்றவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் எரிவாயு விநியோக முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அங்கிருந்த அனைவருக்கும் விநியோகிக்கும் அளவுக்கு எரிவாயு போதுமானதாக இருக்காமையால் ஏனையோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.



**ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் புதிய தலைமைத்துவத்தின் முதல் வேலைத்திட்டமாக பொலன்னறுவை கிரிதல பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 56 வருடங்களுக்கு மேல் ஊடகத்துறையில் பணியாற்றி வரும் மூத்த ஊடகவியலாளர் எம்.எல்.ஏ. ரஷீத் கையில் ஏற்பட்டுள்ள உபாதைக்கான சத்திரசிகிச்சைக்காக ஒரு தொகை பணம் கையளிக்கப்பட்டது. இந்த பணத்தை போரத்தின் பொதுச் செயலாளர் எம்.ஜே. பிஸ்ரின் முஹம்மத் அவரது இல்லம் சென்று கையளித்தமை குறிப்பிடத்தக்கது.**

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தென்னாபிரிக்கத் தூதுவருடன் சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தென்னாபிரிக்காவின் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க்கை கடந்த வெள்ளிக்கிழமை (25) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுபவம் குறித்து இந்த சந்திப்பின் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

இந்த அனுபவங்கள் இலங்கையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஆக்கபூர்வமாக மாற்றியமைக்கப்படுவதை உறுதி செய்வதில் அக்கறை செலுத்தும் அதேவேளையில், ஏனைய நாடுகளின் நேர்மறையான அனுபவங்களை உன்னிப்பாக ஆராய்வதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாகும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினார்.

தென்னாபிரிக்காவின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரான அவரது பல்வேறு முன்முயற்சிகள் தொடர்பிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு உயர்ஸ்தானிகர் விரிவாக கருத்துரைத்தார்.



## தத்துவம் தங்கராசு



**நாட்டின் எல்லா இடங்களிலும் மக்கள் வரிசைகளில் நின்று சிலிண்டர், எரிபொருள், பால்மா போன்றவற்றை பெறுகின்றனர்.**

**இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு செய்தி வந்தது. உணவு கட்டுப்பாட்டில் இருந்து உணவை சேமிக்க வேண்டுமென வடகொரிய தலைவர் உத்தரவிட்டிருப்பதாக அந்த செய்தியில் சொல்லப்பட்டது.**

**அப்போது அந்த செய்தியை பார்த்து பலர் சிரித்தனர். பலர் ஏளனமும் செய்தனர். ஆனால் இப்போது நிலைமையை பார்த்தீர்களா?**

**தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும் என்பார்களே, தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்கும் என்பார்களே... அப்படித்தான் இப்போது எங்களுக்கு வரும்போதுதான் நிலைமையின் தாக்கம் புரிகிறது...**

**வடகொரியத் தலைவனாவது அந்நாட்டு மக்களை தயாராக இருக்க கேட்டுக்கொண்டான்...**

## டீசல் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு சதி

### தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

டீசல் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கான சதி நடவடிக்கைகளில் சில தரப்பினர் மீண்டும் ஈடுபட்டுள்ளனர் என தொழிற்சங்கங்கள் குற்றஞ் சுமத்தியுள்ளன.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தனது அனுமதிப்பத்திரம் தொடர்பான முக்கிய நிபந்தனையை மீறியுள்ளது என தொழிற்சங்கத் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த நிறுவனத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா ஐ.ஓ.சிக்கு இலங்கையில் செயற்படுவதற்கான அனுமதி மாத்திரம் உள்ளது. விலைகளை அதிகரிப்பது குறித்த முடிவை பொறுப்பான அமைச்சரே எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

லங்கா ஐ.ஓ.சிக்கு வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தின் முக்கிய நிபந்தனை அது தரமான எரிபொருளை தடையின்றி நியாயமான விலைக்கு வழங்கப்படவேண்டும் என்பதே என தெரிவித்துள்ள ஆனந்த பாலித, இந்த நிபந்தனைகளை அந்த நிறுவனம் மீறியுள்ளது. ஆனால் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ள அதிகாரிகள் அமைதியாக வேடிக்கை பார்க்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரும் அதிகாரிகளும் எந்த நடவடிக்கையும் எடுக்காததை பார்க்கும்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் விலைகளை அதிகரிப்பதற்கான சதி இடம்பெறுகின்றது என நாங்கள் கருதுகின்றோம், என அவர் தெரிவித்துள்ளார்.

## மாவனெல்லயில் மின்னல்தாக்கி 25 பேர் வைத்தியசாலையில்

மாவனெல்ல பகுதியில் மின்னல் தாக்கியதில் சிறுவர்கள் உள்ளிட்ட 25 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணச் சடங்கு இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே மின்னல் தாக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாவனெல்ல பெமினிவத்தை பகுதியிலுள்ள மயானமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் சிறுவர்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய சர்வ முஸ்லிம் கட்சி மாநாட்டை கூட்டுங்கள்

### கிழக்கின் கேடயம் முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு



*(நூருல் ஹுதா உமர்)*

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முறையாக அணுகி எவ்வகையான பிரச்சினைகள் உள்ளன என்பது தொடர்பில் ஆராய்ந்து தொகுப்பதும் அதற்கான தீர்வுகள் என்ன என்பதைப் பற்றியும் தலைவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு அதனை ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. இது தொடர்பில் ஆராயும் சர்வ முஸ்லிம் கட்சி மாநாடு ஒன்றை அவசரமாக கூட்டி இவ்விடயத்தை மேற்கொண்டு செய்யுமாறு கிழக்கின் கேடயம் அமைப்பு முஸ்லிம் அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளது.

இந்தக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டுமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி போன்ற இலங்கையில் உள்ள முஸ்லிம் கட்சிகள் சகலதையும் அத்துடன் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் உறுப்பினர்கள் சகலரையும் கேட்டுக்கொள்வதாக கிழக்கின் கேடயம் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்து கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

எமது நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கு காணிப்பிரச்சினைகள், முஸ்லிம் பெண்களின் ஆடை உரிமை, ஒரே நாடு ஒரே சட்டம், விவாக விவாகரத்து சட்டத் திருத்தம், அரபு கலாபீடங்கள் மற்றும் குர்ஆன் மத்ரஸாக்கள் மீதான கெடுபிடி, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகளுக்கு இடம்பெறும் அநீதிகள், விவசாய நிலங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கல்முனை, வாழைச்சேனை, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களில் உள்ள பிரதேச செயலகங்களின் பிரச்சினைகள், இனப்பிரச்சினை, அரசியல் தீர்வில் முஸ்லிம்களின் வகிபாகம், புதிய அரசியலமைப்பில் முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல், சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, காத்தான்குடி போன்ற பல்வேறு பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்ற உருவாக்கங்கள் மற்றும் தரமுயர்த்தல்கள், அரசியல் பழிவாங்கல்கள், தேசிய ரீதியாக உள்ள முஸ்லிம்களின் பூர்வீக நிலங்கள் கொள்ளையிடப்படுகின்றமை, முஸ்லிம் வாழ்வியல் ரீதியிலான பிரச்சினைகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் முஸ்லிம் பாடசாலைகளை அதிகரித்தல் மற்றும் கல்வி மேம்பாட்டு விடயங்கள், பொது பலசேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான காய்நகர்த்தல்கள், நாட்டின் பொருளாதார மீட்சிக்கான ஆலோசனைகள், விவசாயிகளின் உரப்பிரச்சினை, இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கான திட்டமிடல்கள் உட்பட எண்ணிலடங்காத பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

இவற்றை துறைசார்ந்த நிபுணர்களின் உதவியுடன் ஆலோசிக்க வேண்டிய தேவை இருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்ப சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்தபோது அவற்றுக்கு ஆதரவாக கரம்கோர்த்த முஸ்லிம் தலைவர்கள் தமது சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்க அரசியல் வேற்றுமைகள் மறந்து முஸ்லிம் சமூகத்தின் இருப்பு மற்றும் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாக உள்ளது.

சகல முஸ்லிம் கட்சிகளும் ஒரே மேசையில் அமர்ந்து முஸ்லிம்கள் தேசிய ரீதியாக அனுபவித்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டிய காலம் கனிந்துள்ளது. இவ்விடயத்தில் அவசரமாக செயற்பட்டு முஸ்லிம்களின் நிம்மதியான வாழ்வுக்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொள்கைத்திட்ட வரைபை வரையுமாறும் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எங்களால் முடியுமான சகல ஒத்துழைப்புகளையும் எந்த நேரத்திலும் செய்ய தயாராக இருக்கிறோம் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கம் மீது எந்த அதிருப்தியும் இல்லை; நாங்கள் அரசிலிருந்து வெளியேறவும் மாட்டோம்

## ராமேஷ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

"அரசுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் சிறந்த நல்லுறவு இருக்கின்றது. எனவே, அரசிலிருந்து வெளியேறண்டிய தேவையில்லை. அரசில் இருந்தபடியே மக்களுக்காக போராடும் தைரியம் காங்கிரஸுக்கு இருக்கின்றது - என இ.தொ.காவின் நிதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், ல ங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30ஆம் திகதி கூடும் எனவும், இதன்போது புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் நேற்று (27) இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயல ாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான



மருதபாண்டி ராமேஷ்வரனுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத் தப்பட்ட நிதியிலிருந்து ஒருதொகை பொருட்கள் நேற்று (27) நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட பெருந்தோட மக்களுக்கும், கிராமபுற மக்களுக்கும் நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன்,

"அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும் தனியான ொள்கையுடன் செயற்படும் கட்சியே இங்கைத் தொழிலாளர் காங்கிரஸாம். சர்வகட்சி மாநாட்டில் எமது கட்சி ஏன் ங்கேற்கவில்லை என்பது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் விரிவாக விளக்கமளித்துள்ளார். நாம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அவை நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான ஒரு நகர்வாகக்கூட இது இருக்கலாம்.

அரசுமீது இ. தொ.கா. அதிருப்தியில் உள்ளதென எ திரணிதான் பிரசாரம் முன்னெடுத்து வருகின்றது. எம்மிடையே சிறந்த நல்லுறவு இருக்கின்றது. எவ்வித பிளவும், பிரச்சினையும் இல்லை. அரசுக்குள் இருந்துகொண்டு, எப்படி போராடி மக்கள் உரிமைகளை பெறவேண்டும் என்பது எமக்குத் தெரியும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30ஆம் திகதி கூடும். இதன்போது தலைவர் பதவிக்கு நியமனம் இடம்பெறும். அதேவேளை, கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் 40 ரூபா என்ற மானியம் குறையாது - என்றார்.

# சீனி – அரிசிக்குத் தட்டுப்பாடு; ஹட்டனில் மக்கள் திண்டாட்டம்

(மனூர சுதத்)

ஹட்டன் சதொச கிளையில் சீனி மற்றும் அரிசி உரிய முறையில் விநியோகிக்கப் படாதமையினால் இப்பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஹட்டன் நகரின் மையப்பகுதியிலுள்ள சதொச கிளையில் சீனி மற்றும் அரிசி கிடைக்காத காரணத்தினால் அதனை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிளையில் தலா 5 கிலோ அரிசியும் 5 கிலோ சீனியும் வழங்கப்பட்டாலும்,அதனை முறையாக விநியோகிக்க தவறுதல் மற்றும் அந்த தொகையை வழங்குவதற்கும் அங்கு உரிய தொகை கையிருப்பில் இல்லை என்பதோடு, சீனி மற்றும் அரிசியை வெளி யாட்களுக்கு விற்பனை செய்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் சதொச கிளை அதிகாரி ஒருவர் வினவியபோது,

சீனி மற்றும் அரிசி கிடைக்காதமையினால் கையிருப்பில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டி னாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# தியத்தலாவையில் கோர விபத்து; 17 வயது மாணவி உயிரிழப்பு!

தியத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட் ட தியத்தலாவ நில அளவை காரியாலயத்திற்கு முன்னால் மோட்டார்சைக்கிளும், அம்பியூலன்ஸும் மோதி விபத்துக் குள்ளானதில் படுகாயமடைந்த 17 வயதுடைய மாணவி, தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச் சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.




மோட்டார்சைக்கிளை செலுத்திய 29 வயதுடைய நபர் தியத்தலாவை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகி ச்சைகளுக்காக பதுளை வைத்தியச்லைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் (26) இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை வைத்தியசாலையிலிருந்து நோயாளியை ஏற்றிக்கொண்ட அம்பியூலன்ஸ் தியத்தலாவை வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருக்கை கயில் அம்பியூலன்ஸை மோட்டார்ை சக்கிள் முந்திச்செல்ல முற்பட்டபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. அம்பியூலன்ஸ் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு மக்கள் வீதிக்கு இறங்கவேண்டும்

## மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சோ. ஸ்ரீதரன் தெரிவிப்பு

''மக்களுக்கு விரோதமான இந்த அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு மக்கள் தொடர்ச்சியாக வீதிக்கு இறங்கிப் போராட வேண்டும்'' - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்றுமுன்தினம் (26) இடம் பெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயற்பாட்டாளர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் தெரிவித்த தாவது:

எமது நாட்டில் இன்று அராஜக ஆட்சியொன்று இடம்பெறுகின்றது. எமது நாட்டில் வாழ்கின்ற சகல மக்களுக்கும் ஏதோவொருவகையில் நாளுக்குநாள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத்



தீர்க்கக்கூடிய திராணியற்றவர்களாக இன்றைய ஆட்சியாளர்கள் உள்ளனர்.

அரசாங்கத்தின் கடன்சுமை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்து விரக்தி நிலையில் உள்ளனர். இந்த அரசாங்கம் குறித்து நாம் வீட்டிலிருந்து எதிர்ப்புத் தெரிவித்து பிரயோசனமில்லை. வீதியில் இறங்கிப் போராட வேண்டும்.

அந்தவகையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களின் ஏற்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச கலந்துகொள்ளும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு தலவாக்கலை நகரில் இடம்பெறவுள்ளது.

இந்த உணர்வுபூர்வமான போராட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த சகல மக்களும் அணிதிரண்டு கலந்துகொள்ள வேண்டும்.

இந்தப் போராட்டத்தின் ஊடாக மக்கள் விரோத அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு நாம் உந்துசக்தியாக இருக்கவேண்டும் - என்றார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பண்டாரவளை வலயத்திற்குட்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய பலகல எல்ல தமிழ் வித்தியாலயத்தின் ம.ஸ்ரீயாபிருந்தா (166 புள்ளி), ரா.கபிஷாலனி (165 புள்ளி) க.கிருஷாந்தினி (156 புள்ளி) வி.கிருத்திக்ஷன் (158 புள்ளி) ஆகிய மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். (படம் : நடராஜா மலர்வேந்தன்)

# நீர்க்கசிவை சீராக்க சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர் வெளியேற்றம்

(ஏ.ஏ.எம்பாயிஸ்)

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவை சீர்செய்ய நீர்த்தேக்கத்திலுள்ள நீரை வெளிே யற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்தார்.

பலாங்கொை டயில் அமைந்துள்ள சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதால் இதனை திருத்தம் செய்து பழுதுபார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர் தெரிவித்தார்.

இவ்விடயமாக ஊடகவியலாளர்களிடம் அவர் கருத்து தெரிவித்தபோது,

நீர்த்தேக்கத் தின் நீரை வெளியேற்றி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நீர்த்தேக்கத்தின் நீரை பொறியியலாளர்கள் தொழில்நுட்ப முறையில் வெளியேற்றி இக்கசிவை சீர்படுத்தும் முயற்சி மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டுக்கு நல்லாசிவேண்டி நாடு முழுவதும் பிரார்த்தனை; மகளிர் அமைப்புகளால் 30ஆம் திகதி முன்னெடுப்பு

(கண்டி நிருபர்)

நாட்டுக்கு நல்லாசிவேண்டி பிரார்த் தனை நிகழ்வொன்றை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பும் காணாமலாக்கப்படடோர்களது மகளிர் அமைப்பும் இணைந்து ஒழுங்குசெய் துள்ளன. அதன்படி, மார்ச் 30 ஆம் திகதி அனைத்து பெண்களும் இப்பிரார்த்த னையில் ஈடுபடவேண்டும் - என அவ்வமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

கண்டி ரிவடேல் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போது அவர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

30ஆம் திகதி மாலை 6 மணிக்கு நாட்டிலுள்ள சகல தரப்பினரும் ஒரே நேரத்தில் விளக்கேற்றி நாட்டின் பொருளாதார சிக்கல்கள் நீங்கவேண்டும் என்பதுடன் நிர்வாகிகளுக்கு அதுபற்றிய தெளிவு கிடைக்க வேண்டுமெனவும் குறைந்தது 5 நிமிடமாவது பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த அமைப்பின் அங்கத்தவரான ஜெனி பரமேஸ்வரன் அங்கு தெரிவித்ததாவது,

என்றும் இல்லாத அளவு மலையக பெருந் தோட்ட மக்கள் இன்று பாதிப்படைந்துள் ளனர். எனவே, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட




பெண்களது அமைப்பு மற்றும் காணாமலாக் கப்பட்டோர்களது உறவினர்களது பெண்கள் அமைப்பு என்பன ஒழுங்கு செய்துள்ள பரார்த்தனையை கட்டாயம் மலையக தமிழ்ப் பெண்கள் மார்ச் 30ஆம் திகதி மேற்கொள்ள வேண்டும்.

இன்றைய பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு மலையக பெருந்தோட்ட தமிழ்ப் பெண்கள் இப்பிரார்த்தனையை ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

குறைந்தது ஐந்து பேர்கொண்ட குழுக்களாக வாவது இணைந்து தத்தமது வீடுகளிலே இப்பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். முடியுமானவர்கள் தமது சமயத்தலங்களுக்குச் சென்று 30ஆம் திகதி சரியாக மாலை 6 மணிக்கு மேற்படி பிரார்த்தனையை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண் டார்.

மேற்படி அமைப்பின் தலைவி திருமதி விசாக்கா தர்மதாச அங்கு தெரிவிக்கையில்,

இன்று நாடு மிக இக்கட்டான நிலை யில் உள்ளது. நாட்டுப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கும் நாட்டு நிர்வாகிகளுக்கு சீரான தெளிவு ஏற்பட வேண்டுமெனவும் அப் பிராத்தனையில் கேட்கும்படியும் தெரிவித்தார்.

மேற்படி அமைப்பைச் சேர்ந்த சுமேத்ரா ரத்நாயக்கா தெரிவித்தாவது,

மார்ச் மாதம் என்பது பெண்களுக்கான மாதம். அதேநேரம் நாட்டில் எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அது இறுதியாக வீடுகளுக்குச் செல்லும். வீட்டில் பிரச்சி னைகளை எதிர்கொள்வது குடும்பப் பெண் களாகும். எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு விடுபட அரசியல் தலைவர்களுக்கு நல்ல ஞானம் கிடைக்க வேண்டுமென வேண்டுவது பெண்களது பொறுப்பு - என்றார்.

# சுகாதார வழிமுறைகளை உல்லாசப் பயணிகள் மீறுவதால் பொலிஸார் எச்சரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சுகாதார விதிமுறைகளை மீறுவதால் எம்பிலிப்பிட்டிய சந்திரிக்கா வெவவுக்கு உள்நாட்டு உல்லாசப் பயணிகளை அனுமதிக்க வேண்டாம் என அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதை அடுத்து எம்பிலிப்பிட்டிய மற்றும் வெளிப் பிரதேச உள்நாட்டு உல்லாசப் பயணிகள் சந்திரிக்கா வெவ குளத்தில் உல்லாசமாக குளிக்கவும் நீ ர்விளையாட்டுகளை விளையாடவும் வருகைதந்த வண்ணமுள்ளனர்.

ஆனால், இவ ர்களில் அநேகமானோர் கொரோனா விதிமுறைகளை மீறி செயல்படு வதாக பொலிஸார் முறையிடுகின்றனர்.

இங்கு வரும் பொதுமக்களில் பெரும்பாலா னோர் முகக்கவசங்களை அணிவதில்லை எனவும் குளத்தின் அணைக்கட்டு வழியே பொதுமக்களு க்கு இடையூறு ஏற்படும் வகையில் வாகனங்கள், மோட்டார்சைக்கிள் களை ஓட்டுவதாகவும் இதனால் கொரோனா தொற்று மாத்திரமன்றி விபத்துகள் ஏற்படும் சூழ்நிலைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

சிலர் மதுபோதையில் உலாவி பொது மக்களுக்கு தொந்தரவு கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இங்கு உள்ளூர் உல்லாசப் பயணிகளை அனுமதிக்க வேண்டாம் என பிரதேச மக்கள் சுகாதாரத் தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால் இவ் விடத்தில் மக்கள் ஒன்று கூடுவதை எதி ர்காலதத்தில் தடைசெய்ய வேண்டிய நிலைகளும் உருவாகலாம் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் உயர்ஸ்தானிகர் வைத்திய கலாநிதி ஆத்ரா தலைமையில் இந்தியா வழங்கும் கல்வி புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் இலங்கை அரச உயர பதவிகளிலுள்ளவர்கள் இந்திய பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப - பொருளியல் அறிவைப் பெற்றுக்கொண்டவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்வு கண்டி மஹாவெலி ஹோட்டலின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படங்கள்; இக்பால் அலி)

# வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் மீது மூன்று நபர்கள் தாக்குதல்

(வவுனியா நிருபர்)




வவுனியா, செட்டிக்குளம், வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் மீது மூன்று நபர்கள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டதில் படுகாயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (25) பாடசாலை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் காலை 8.40 மணியளவில் பாடசாலைக்குள் சென்ற மூன்று நபர்கள் இணைந்து பாடசாலை வளாகத்தில் நின்ற ஆங்கில பாட ஆசிரியரான சாந்தகுமார் (வயது- 45) என்பவர் மீது கட்டையினால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். மற்றைய ஆசிரியர் இதனை கண்ணுற்றதும் அவர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

தலையில் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் காணப்பட்ட ஆசிரியர் சக ஆசிரியர்களின் உதவியுடன் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், பாடசாலையில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்றுகூடியமையினால் பதற்ற நிலைமை நிலவியதுடன் அதனை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

# படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஏப்ரல் 03இல் யாழில் கண்டனப் பேரணி

## அனைவரையும் கலந்துகொள்ளுமாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அழைப்பு

(யாழ். செய்தியாளர்)



காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புகளின் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

கலந்துரையாடலுக்கு பின்னர் கண்டனப் பேரணி தொடர்பில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் அ.லீலாவதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் கண்டனப் பேரணி முற்றவெளியில் நிறைவடையும்.

இந்தப் பேரணியில் கட்சி மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகளை கடந்து இந்தப் போராட்டத்தை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளோம் என்றார்.

வீடியோவைக் காண...

# யாழில் நவீன முறையில் உருளைக்கிழங்கு செய்கையின் அறுவடை நிகழ்வு



(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தில் நவீன முன்மாதிரி முறையில் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு செய்கையின் அறுவடை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (25) புன்னாலைக்கட்டுவன், ஈவினை மத்தி கிராமத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் இணைப்புச் செயலாளர் குலேந்திரன் சிவராம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சொட்டு நீர்ப்பாசனம், உயர் பாத்தி மற்றும் பொலித்தீன் மூடுபடை தொழில்நுட்பத்தின்கீழ் இந்த முன்மாதிரி உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையானது மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 01.01.2022 அன்று 8 பரப்பு விஸ்தீரணக் காணியில் 45cm X 30cm நடுகை இடைவெளியில் "சசி" இன உருளைக்கிழங்குகள் இச்செயற்றிட்டத்தின்கீழ் பயிரிடப்பட்டன.

இந்த அறுவடை நிகழ்வில் உரையாற்றிய குலேந்திரன் சிவராம்,

விவசாய பிரதி அமைச்சராக அங்கஜன் இராமநாதன் சேவையாற்றிய காலத்தில், உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு மானியம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். அதன்படி, நவீன முன்மாதிரி முறையில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மாமரச் செய்கை, மிளகாய்ச் செய்கை, உருளைக்கிழங்கு செய்கைகளுக்காக மானியங்களை பெற்றுக்கொடுத்தோம். இவ்வாறு நவீன முன்மாதிரி முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைகளுக்கு மானியங்களை வழங்குவதானது கூடிய அர்த்தம் மிக்கதாகிறது.

தற்போதுள்ள நிலையில் செலவுகளை கட்டுப்படுத்தி விவசாயம் மேற்கொள்ளும்போதே விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கும். மீண்டுமொரு விவசாய யுகத்தில் நாம் நுழைந்திருக்கிறோம். சிறிமாவோ காலத்தில் எமது மண்ணில் கல்வீடுகள் கட்டப்பட்டதைபோல் எமது மண்ணின் விவசாயிகளினால் சவால்களை தாண்டிய வெற்றியை பதிவுசெய்யமுடியும்.

விவசாயிகளை நம்பியே எமது இலங்கை தேசம் உள்ளது, விவசாயிகள் உணவுப்பற்றாக்குறையை ஒருபோதும் ஏற்படவிட மாட்டார்கள். எனவே, அதிகளவு பணப்பயிர்களையும் உணவுப்பயிர்களையும் பயிரிட்டு இந்தப் பொருளாதார நெருக்கடியை விவசாய வெற்றியின் ஊடாக மீட்டெடுப்போம் – என்றார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர், விவசாய நவீனமயமாக்கல் திட்ட விவசாய விஞ்ஞானி, விவசாய போதனாசிரியர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் தின நிகழ்வு



(வவுனியா நிருபர்)

"நிலைபேறான அபிவிருத்திக்கு பால்நிலை சமத்துவம் பேணுவோம்" எனும் தொனிப் பொருளில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெண் முயற்சியாளர்களின் கௌரவிப்புடன் பிரதேச செயலக மகளிர் தினம் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (25) பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

"நிலைபேறான அபிவிருத்திக்கு பால்நிலை சமத்துவம் பேணுவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெண் முயற்சிகளுக்கான நேர்முகத் தேர்வின்போது தெரிவுசெய்யப்பட்ட மூவருக்கு இதன்போது விருதுகளும் கௌரவிப்பும் வழங்கப்பட்டன.

அத்துடன், விளையாட்டு நிகழ்வுகளில் சாதனை படைத்த பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வீராங்கனைகளுக்கான கௌரவிப்பும் வழங்கப்பட்டது. அபிவிருத்தியில் பெண்களின் பங்கு மற்றும் பெண்கள் உரிமைகள், பெண்களின் முன்னேற்றம் என்பவற்றை வெளிப்படுத்தி பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐயம்பிள்ளை புவனநாயகி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி பத்மாவதி ஜெயச்சந்திரன், ஓய்வுபெற்ற சிறைச்சாலை மேற்பார்வையாளர் சிறிசெயானந்தபவன் அகிலதிருநாயகி, உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்சினி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மகளிர் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழில் இடம்பெறவுள்ள போக்குவரத்து தொடர்பான நடமாடும் சேவை



(யாழ். நிருபர்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் "வீதி ஒழுங்குகளை பேணிப் பாதுகாப்பாக பயணிப்போம்" எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜிவா சிவதாஸ் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை காலை 9 மணிமுதல் மதியம் 3 மணிவரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை வளாக கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

பல ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையில், வாகன உடைமை மாற்றங்கள், வாகன பதிவுப்புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் நிறைச் சான்றிதழை பெறல், வாகன உடைமை மாற்ற படிவங்களை கையேற்றல், சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சை, சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் மாற்றம் தொடர்பான விடயங்கள், சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவப் பரிசோதனை, வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளல், 2015ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட முன்மொழி அடிப்படையில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான நிபந்தனை நீக்கம் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்திலுள்ள இடர்பாடுகள் மற்றும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் நேரடியாக கொழும்புக்குச் சென்று சேவைகளை பெற்றுக்கொள்வதிலுள்ள இடர்பாடுகளை கருத்திற்கொண்டு மக்களுக்கு அருகில் இந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேச செயலகங்களிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவிலும் யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள பிரதி மோட்டார் போக்குவரத்து ஆணையத்திலும் வடமாகாண போக்குவரத்துப் பிரிவிலும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.

இது தொடர்பான ஊடக சந்திப்பின்போது வடமாகாண மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் இ.சிவகரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நிர்வாக ஆணையாளர் சுசந்த ஜயதிலக்க, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் சஞ்சீவனி மற்றும் காஞ்சனா பொன்சேகா ஆகியோர் பங்கேற்றனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

யா/கொடிகாமம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெகதாஸின் கோரிக்கைக்கமைவாக, ஜேர்மனியில் வசிக்கும் க.விதுசன் என்பவரின் நிதிப் பங்களிப்பில் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ப.தர்மபூவதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும் இலங்கை முதலுதவிச் சங்க தேசிய கண்காணிப்பாளருமான வை.ஜெகதாஸ் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்திருந்தார்.

# மதுவரித் திணைக்களத்தால் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் (26) பிற்பகல் 520 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மதுவரி பொறுப்பதிகாரி ராஜ்மோகனின் வழிநடத்தலில் மதுவரிப் பரிசோதகர் ரசிகரன் தலைமையிலான குழுவினர் அல்லாரை தெற்குப் பகுதியில் இக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அல்லாரை தெற்கைச் சேர்ந்த 25 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதவான் அவரை 08/04/2022 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.


திகதி 26.03.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4718 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,821,830.00

ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 0 1 5 9 0 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,238,540.00

Mega Power 23+ கோடி மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1066 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,547,560.00

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 244,144,586.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஆங்கில எழுத்து: Y — சுப்பர் இலக்கம்: 16 — வெற்றி இலக்கங்கள்: 06 53 75 77

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 748 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,277,940.00

ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 15 38 46 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,586,882.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1228 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,227,560.00

வெற்றி இலக்கினம்: கடகம் — வெற்றி இலக்கங்கள்: 6 7 6 0 2 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,718,858.80

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

திகதி 25.03.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4717 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,362,950.00

ஆங்கில எழுத்து: E — வெற்றி இலக்கங்கள்: 2 1 8 5 9 3 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,103,304.00

Mega Power 23+ கோடி மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1065 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,850,320.00

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 243,831,098.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஆங்கில எழுத்து: M — சுப்பர் இலக்கம்: 13 — வெற்றி இலக்கங்கள்: 34 41 43 69

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 747 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,682,420.00

ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 03 06 13 21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,323,751.60

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

# ஏறாவூர் பிரதேச உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிப்பு

(பொத்துவில் நிருபர்)

ஏறாவூர் நகர சபை பிரதித் தவிசாளர் எம்.எல்.ரெபுபாசம், நகர சபை உறுப்பினரான ஏ.எப்.பஜிஹா மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினரான எம்.எஸ்.எம்.ஜஃபர் ஆகியோரது உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் பதவி காலியாகியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.ரெபுபாசம் மற்றும் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்ட ஏ.எப்.பஜிஹா ஆகியோர் ஏறாவூர் நகர சபைக்கு அக்கட்சியினால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர்களாவர்.

மேற்குறித்த உறுப்பினர்கள் இருவரும், ஏறாவூர் நகர சபை தவிசாளர் தெரிவின்போது கட்சியினுடைய தீர்மானத்தினை புறக்கணித்தும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதனால், சுதந்திரக்கட்சி அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்து கட்சியில் இருந்தும் வெளியேற்றியது.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் மற்றுமொரு உறுப்பினரான எம்.எஸ்.எம்.ஜஃபர் என்பவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்டதனால், அக்கட்சி அவருக்கெதிராகவும் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, உறுப்புரிமையையும் இரத்துச்செய்து கட்சியில் இருந்தும் வெளியேற்றியது.

இதற்கிணங்க, ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபை போன்றவற்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்குறித்த உறுப்பினர்களின் பதவிகள் நீக்கப்பட்டமை குறித்து, அக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தார்.

இதற்கமைவாக, குறித்த உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபைகளில் அவர்களது உறுப்பினர் பதவிகளை இழந்துள்ளனர்.

இதுகுறித்து தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவித்தல் வர்த்தமானி வெளியாகியுள்ளது.

# மட்டக்களப்பில் வாழ்விடத்தை அமைத்துக்கொள்ள வழிவகையின்றி நெருக்குவாரப்படும் முஸ்லிம் மக்கள்

## ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி. தகவல்





(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மொத்தக் காணிகளில் 1.54 வீதக் காணிகள் மாத்திரமே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதாக பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஏறாவூர் நகர பிரதேச செயலக மண்டபத்தில் ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி. தலைமையில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

அங்கு நிகழ்வைத் தொடங்கி வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகள் எதிர்கொள்ளும் பிரச்சினை கரிசனைக்குரியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 சதவீத முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். 04 பிரதேச செயலகங்கள் முஸ்லிம்களுக்காக உள்ளன.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மொத்தக் காணிகளில் 1.54 வீதக் காணிகள் மாத்திரமே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால் முஸ்லிம்கள் வாழ்விடத்தை அமைத்துக் கொள்ள வழிவகையின்றியும் உட்கட்டமைப்புகளை மேற்கொள்ள முடியாமலும் நெருக்குவாரப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் ஏறாவூர் நகரசபை தவிசாளர் எம்.எஸ். நளீம், நகர, பிரதேச சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஏ.ஏ.நாசர், ஏறாவூர் நகரசபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ. தஸ்லிம், திணைக்கள கூட்டுத்தாபனத் தலைவர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக் கூட்டத்தில் நடப்பாண்டில் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள், பின்னடைவுகள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்





(சீலாமுனை நிருபர்)

திருகோணமலை, கோபாலபுரம், மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் ஆகியோர் விஜயம் மேற்கொண்டனர்.

குறித்த விஜயத்தின்போது, வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பார்வையிட்டதுடன், சிகிச்சை வழங்கப்படுகின்ற முறை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதன் பின்னர், வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் மற்றும் குறித்த வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த விஜயத்தை மேற்கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரினால் மூலிகை மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போடியார் புலம்பல்!



**ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 8 பேர் இரு வாரங்களில் ரணிலுடன் இணைவாங்களாம் எண்டு அமைச்சர் மஹிந்தானந்த சாத்திரம் சொல்லுறாரு.. அடேய் தம்பி உங்கட ஆளும் கட்சில இருந்து செத்த நாயில உண்ணி கழறிற மாதிரி சிலர் கழண்டு போறாங்க எலுவா.. மொட்டப்பற்றி கதயாம ஏண்டா சஜீத்திற ரெலிபோணயும், ரணிலிட யானையையும் பற்றி கோள்மூட்டுறா! அடுத்வண்ட ஊட்டுல என்ன நடக்கிது எண்டு பாக்கிறத உட்டுத்து ஒண்ட ஊட்டுல நடக்கும் கூத்த பாரு!**

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



முஹம்மத் அஸ்ரப் ஷம்ரா-158 | கலீல் பாத்திமா ஷாரா-155 | இர்ஷாத் அத்வா மர்யம்-151 | அன்சார் நதிகா அரினா -150

(காரைதீவு நிருபர்)

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள நிந்தவூர் கமு/கமு/அல் -மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளான அன்சார் நதிகா அரினா -150, முஹம்மது இர்ஷாத் அத்வா மர்யம்-151, கலீல் பாத்திமா ஷாரா-155, முஹம்மத் அஸ்ரப் ஷம்ரா-158 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த விசேட தேவையுடைய மாணவனுக்கு பாராட்டு



(சீனக்குடா நிருபர்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் விசேட தேவையுடையோர்களுக்கான வெட்டுப்புள்ளியை விட அதிகமாக பெற்று, புலமைப்பரிசில் நிதிக்கு தகுதி பெற்ற கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவன் எம்.முர்சீத் கௌரவிக்கப்பட்டார்.

கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்தின் விசேட கல்விப் பிரிவினால் இதற்கான நிகழ்வு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் ஆர். சதாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இந்த மாணவன் வலயக்கல்வி பணிப்பாளரால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பெண்கள் உதவி மன்றத் தலைவி எஸ்.நளீமாவினால் இந்த மாணவனுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஆசிரிய ஆலோசகருமான ஏ.எம். ஹிதாயத்துல்லா, விசேட கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகர், ஏ. ஆர். கஸ்ஸாலி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# முகம்மது இஸ்மாயில் முகம்மது நவாஸ் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை 05ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் முகம்மது நவாஸ், நாடு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அண்மையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவிலுள்ள சேவை குறைபாடுகளை அறிவிக்க QR முறை அறிமுகம்




(எம்.என்.எம்.அப்ராஸ், நூருள் ஹுதா உமர், பைஷல் இஸ்மாயில்)

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவிலுள்ள வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் தேவையான சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்களுக்கு எப்போதும் சிறந்த சேவையினை வழங்குவதே எமது நோக்கமாகும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் சுகாதார சேவைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விடயங்கள் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு காணப்படுகிறது. எமது பிரிவில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் அரச வைத்தியசாலைகளை பயன்படுத்த வேண்டுமெனவும் மேலும் எமது கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் பொதுமக்களுக்கு சுகாதார சேவைகள் தொடர்பில் குறைபாடுகள் காணப்படின் எமக்கு நேரடியாக அறிவிக்க முடியும் அல்லது மேலும் இதற்கென புதிதாக ஒன்லைன் QR கோட் முறையினை ஏற்படுத்தியுள்ளோம். இதனை வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் QR scan stickers ஒட்டப்பட்டுள்ளது. இதனை smart phone மூலம் scan செய்வதன் மூலம் சேவை தொடர்பான விடயங்களை எமக்கு அறிவிக்க முடியும் என கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

எதுவும் குறைபாடுகள் காணப்படின் இதன் மூலம் உடனடியாக நடவடிக்கைகள் ஏற்படுத்த முடியும் நிலை உள்ளது அல்லது எமது சேவைகள் திருப்திகரமானதாக உள்ளதா? இல்லையா? என்பதை அவதானிக்க முடியும். மக்கள் சிறந்த முன்னோடி மிக்க சுகாதார சேவையினை பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் இதன்மூலம் பொது மக்கள் மத்தியில் சுகாதார சேவைகள் நம்பிக்கைமிக்கதாக கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் பேசப்படும் நிலை இன்று உள்ளது.

இவையெல்லாம் எமது பிராந்தியத்தில் உள்ள சுகாதார சேவை ஊழியர்களை கண்டிப்பதற்கு அல்ல, இன்றுள்ள சூழலில் பொது மக்கள் அரச வைத்தியத்துறை சேவையினை பூரணமாக பயன்படுத்தினால் அவர்களின் பொருளாதார சுமையை பெருமட்டில் குறைக்க முடியும்.

ஒரு குழந்தைக்கு வைத்திய செலவுக்காய் சாதாரணமாக (போக்குவரத்து உட்பட) சுமார் 3000 ரூபா வரை செலவு செய்வதாக தெரிய வருகின்றது. ஆனால் எமது கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் குழந்தைகளுக்கான மருந்து வகைகள் தற்போது கையிருப்பில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் மக்களுக்கும் சுகாதார சேவைகள் சிறந்த முறையில் கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

# காசநோய் தினத்தையொட்டி மாளிகைக்காட்டில் விழிப்புணர்வு



(நிந்தவூர் நிருபர்)

**சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இணைந்து உலக காசநோய் தினத்தையொட்டி ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் (26) மாளிகைக்காடு சந்தியிலிருந்து மாளிகா வீதி, கடற்கரை வீதி மற்றும் அல்- ஹிலால் வீதி வழியாக சென்றது.**

**அத்துடன் காசநோய் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் வாகனங்களில் ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டன.**

**இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.**

# கல்முனை மாநகர சபையினால் குப்பைகளை தரம்பிரித்து சேகரிக்க விசேட பைகள் அறிமுகம்



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்காக மாநகர சபையினால் விசேட பைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினருடனான விசேட கலந்துரையாடல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன்தினம் (26) மாலை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் மாநகர சபையின் சுகாதார நிலையியற் குழுவின் தவிசாளர் சட்டத்தரணி றொஷான் அக்தர், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உட்பட மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை, குலைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்காக பச்சை நிறப் பையும் இவை தவிர பிளாஸ்டிக், பொலித்தீன், டின்கள் மற்றும் உக்க முடியாத கழிவுகளை வேறாக சேகரிப்பதற்காக மஞ்சள் நிறப் பையும் என்ற அடிப்படையில் இரு நிறங்களிலான பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு பைகளையும் மாநகர சபையின் பழைய கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பிரிவு அலுவலகத்தில் மொத்தமாக நூறு ரூபா பணம் செலுத்தி பொது மக்கள் கொள்வனவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டிருக்கின்ற இப்பைகளிலேயே உக்கும் கழிவுகளை வேறாகவும் உக்காத கழிவுகளை வேறாகவும் சேகரித்து வைத்து, மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் வருகின்ற வேளைகளில் உரிய கழிவுப்பையை மாத்திரம் ஒப்படைத்து விட்டு, அப்பையை மீளவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் உரிய பைகளில் இட்டு கையளிக்கப்படாத குப்பைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது எனவும் கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலின்பேரில் நாடு முழுவதும் திண்மக்கழிவுகளை தரம்பிரித்து சேகரிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புகையிலைகளை தூளாக்கி பயன்படுத்திய பாடசாலை மாணவர்கள் ஐவர் கைது

(கனகராசா சரவணன்)

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்றுவரும் மாணவன் புகையிலைகளை தூளாக்கி அதனை ஏனைய மாணவர்களுக்கு விற்று வந்துள்ளதுடன், அதனை பாவித்துவந்த தரம் ஒன்பதைச் சேர்ந்த மாணவர்கள் ஐவர் கடந்த வெள்ளிக்கிழமை (25) பாடசாலையில் இனங்காணப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களின் பெற்றோரை வரவழைத்து அதில் 4 பேரை எச்சரித்து விடுவித்ததுடன், ஒருவரை கைதுசெய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையைச் சேர்ந்த இந்த மாணவர்கள் நீண்டகாலமாக புகையிலைகளை தூளாக்கி பாடசாலைக்கு கொண்டுவந்து ஏனைய மாணவர்களுக்கு அதனை விற்பனை செய்துவந்துள்ளதுடன், அவர்களும் அதனை பாவித்துவருவதாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவதினத்தன்று குறித்த பாடசாலைக்கு பொலிஸாருடன் பிரதேச செயலக அதிகாரிகள் முற்றுகையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த வகுப்பு மாணவர்களை பொலிஸார் சோதனையிட்ட நிலையில், இந்த புகையிலைத்தூளும் 5 மாணவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன், அவர்களை கைதுசெய்யபொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த புகையிலைத்தூளை செற்றிங் என பெயர் சூட்டப்பட்டு அதனை பாவித்து வந்துள்ளதாகவும் ஒருவகையான போதையை ஏற்படுத்தும் பொருளாக இந்த புகையிலைத்தூளை பாவித்து அதற்கு சில மாணவர்கள் அடிமையாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதையடுத்து குறித்த மாணவர்களின் பெற்றோரை வரவழைத்து 4 மாணவர்களை எச்சரித்து நேற்று இரவு விடுவித்ததுடன், ஒரு மாணவனை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

# அம்பாறையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் நெரிசல்

## ஒழுங்குபடுத்த இராணுவத்தினர் நடவடிக்கை





(பாறுக் ஷிஹான்)

லங்கா ஐ.ஓ.சி. தனது அனைத்து வகையான பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை மீண்டும் அதிகரித்ததைத் தொடர்ந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் நெரிசல் ஏற்பட்டது.

கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் நெரிசலை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனைத்தொடர்ந்து ஏலவே பாதுகாப்புக் கடமைக்காக ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் (26) இரவு எரிபொருள் நிரப்ப வருகை தந்தவர்களை ஒழுங்கமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மேலும் ஐ.ஓ.சி. நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை (25) நள்ளிரவுமுதல் அனைத்து வகை எரிபொருள்ளின் விலையையும் 49 ரூபாவினால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நேற்று (26) நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் தனது அனைத்து வகையான பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 49 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இதன்படி அந்நிறுவனம் விற்பனைசெய்யும் 92 ஒக்டேன் பெற்றோலின் புதிய விலை 303 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. லங்கா ஐ.ஓ.சி. இந்த ஆண்டு மட்டும் நான்கு முறை விலையை உயர்த்தியுள்ளது. டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருவதே எரிபொருள் விலை உயர்வுக்குக் காரணம் என அந்நிறுவனம் தெரிவித்தது.

இதற்கிடையில் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ந்து மக்கள் வரிசையில் நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு நெரிசல் அதிகரித்ததைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, பெரியநீலாவணை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பிரதேசங்களிலுள்ள ஒருசில பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மேலும் சில இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றிரவும் எரிபொருளுக்காக பொதுமக்கள் வரிசைகளில் காணப்பட்டனர். எவ்வாறாயினும் கடந்த நாட்களைவிட தற்போது எரிபொருளுக்கான இந்த வரிசைகள் வெகுவாகக் குறைவடைந்திருந்தன.

எனினும், அனைத்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன (சிப்பெட்கோ)எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இராணுவத்தினர் எரிபொருள் விநியோகத்தை மேற்பார்வை செய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் பொதுமக்களை கண்காணிப்பதற்காகவே இவ்வாறு இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் செயற்கை தட்டுப்பாட்டை குறைப்பதற்காகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தீவிர கண்காணிப்புகளை மேற்கொள்ளும் நோக்கிலும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நீதவானின் வீடு உள்ளிட்ட பல்வேறு இல்லங்களில் கொள்ளையிட்ட சம்பவம்

## தேரர்கள் இருவர் உட்பட எண்மருக்கு முதலாம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

அம்பாறை, அக்கரைப்பற்று நீதவான் ஒருவரின் வீடு உள்ளிட்ட வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட இரு பௌத்த தேரர்கள் உட்பட 8 பேரையும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் மீதான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் இவ்வாறு உத்தரிவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 வீடுகளிலும் டிசம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு நீதவான் வீட்டிலுமாக ஒருமாதத்தில் 4 வீடுகளின் ஜன்னல்களை கழற்றி உள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டியினர் நித்திரையில இருந்த குடும்பப் பெண்களின் கழுத்தில் இருந்த சுமார் 60 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளை திருடிச்சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து விசேட பொலிஸ் குழுவினர் பெப்ரவரி 9ஆம் திகதி இரு பௌத்த தேரர்கள் உட்பட 8 பேரை கைதுசெய்துள்ளதுடன், நீதவான் வீட்டில் கொள்ளையிட்ட தாலிக்கொடி உட்பட 55.5 பவுண் தங்க ஆபரணங்கள மீட்டதுடன், அவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்களின் வழக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (25) விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இவர்களை எதிர்வரும் முதலாம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தக் கொள்ளைக் கோஷ்டியின் பிரதான சூத்திரதாரி பாதாள கோஷ்டி தெமட்டகொடை சமந்தவின் கையாளான குணா அல்லது சத்தியா என்று அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த குணசீலன் மற்றும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த தம்பி ஓடாவி ஆகிய இருவரும் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடி வலையில் சிக்கிய 8 அடி நீளமுள்ள முதலை



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை, சீனக்குடா, கொட்பே பிரதேசத்தில் மீனவர்களின் வலையில் உயிருடன் முதலை ஒன்று சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சீனக்குடா, கொட்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) பிற்பகல் மீனவர்களினால் இழுக்கப்பட்ட கரை வலையிலேயே இந்த முதலை சிக்கியுள்ளதுடன், இந்த முதலை 8 அடிக்கும் அதிக நீளமுடையது என்று மீனவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

அதன்பின்னர் பெரும் சிரமத்திற்கு மத்தியில் மீனவர்களினால் குறித்த முதலை மீட்கப்பட்டு கயிற்றால் கட்டப்பட்டுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து முதலை திருகோணமலை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலையை கண்ணியா பெரியகுளம் பிரதேச குளத்தில் விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வாறு இரு முறைகள் மீன்பிடி வலைக்குள் முதலை சிக்கியதாகவும், இதனால் தமது மீன்பிடி வலைகள் பெரிதும் சேதத்துக்குள்ளாகுவதாகவும் மீனவர்கள் கவலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. நகரில் புதிதாக அமைக்கப்பட்ட வாகன தரிப்பிடம் மாநகர முதல்வரால் திறந்துவைப்பு





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளின்பேரில் நகரில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு புதிய அந்தோனியார் வீதியில் அமைக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வாகனத் தரிப்பிடத்தைத் திறந்துவைத்தார். இவ்வாகனத் தரிப்பிடத்தின் பெயர்ப்பலகையினை ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் திரைநீக்கம் செய்து ஆசீர்வதித்தார். ஒரேநேரத்தில் 200இற்கும் மேற்பட்ட வாகனங்களை இத்தரிப்பிடத்தில் நிறுத்திவைக்க முடியும்.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் ஏ.செல்வராஜா மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா





(மூதூர் நிருபர்)

திருகோணமலையின் தென்பால் அமைந்த மூதூர், கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது. கற்பக விநாயகர் ஆலயத்தின் திருவிழா கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்று முன்தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது. இதன்போது ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

கட்டைபறிச்சான் கற்பக விநாயகர் ஆலயத்தின் திருவிழாவானது நேற்று (27) இடம்பெற்ற தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெற்றது.

# சமையல் எரிவாயுவை பெற்றுத்தருமாறு கோரி சம்மாந்துறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(சம்மாந்துறை நிருபர)

சமையல் எரிவாயுவை வழங்கக்கோரி சம்மாந்துறை பிரதேச மக்கள், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (26) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அருகில் சமையல் எரிவாயு ஏற்றிய லொறி வருமென்ற எதிர்பார்ப்பில் சிலிண்டர்களுடன் மூன்று நாட்களாக அந்தப் பிரதேச மக்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினமும் மக்களுக்கு சமையல் எரிவாயு கிடைக்காத காரணத்தினால் விரக்தியடைந்த பொதுமக்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அம்பாறை வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"கடந்த நான்கு நாட்களாக சமையல் எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக இந்த இடத்தில் (சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகில்) காத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆயினும், எங்களுக்கு சமையல் எரிவாயு தரப்படவில்லை. எந்தவொரு அதிகாரியும் எமக்கு எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை. அதனால், சமையல் எரிவாயு தருமாறு வீதி மறியல் போராட்டத்தை மேற்கொள்கிறோம்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்விடத்திலிருந்து செல்லுமாறு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கோரியதுடன், வீதிப் போக்குவாரத்துக்கு தடையாக இருக்க வேண்டாமென்று வலியுறுத்தினர்.

பொலிஸாரின் தலையீட்டை அடுத்து பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பலத்த வாக்குவாதம் எற்பட்டது.

இவ்வாறு பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன் அலியும் மக்கள் மறியல் போராட்டத்தில் இணைந்துகொண்டார்.

இதன்போது பொலிஸாருக்கும் அவருக்குமிடையே பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

எவ்வாறாயினும் இன்று இவ்விடத்தில் சமையல் எரிவாயு வராது என்று பொலிஸார் தெரிவித்ததற்கமைய சிலர் அங்கிருந்து அகன்று சென்றபோதிலும், பலர் சமையல் எரிவாயு வருமென்ற நம்பிக்கையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# எரிவாயுவுக்காக காரைதீவில் நுகர்வோர் நீண்ட வரிசை



(நூருல் ஹுதா உமர்)

எரிவாயு கொள்வனவு செய்வதற்காக நேற்று முன்தினம் (26) அதிகாலைமுதல் காரைதீவு, கனகரத்தினம் மைதானத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விநியோகம் இவ்வாரம்முதல் வழமைக்குத் திரும்பும் என அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்திருந்தாலும் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றிற்கான விநியோகம் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை.

இதனால் மக்கள் எரிவாயு மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்காக வீதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வரிசையில் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, காரைதீவு, மாவடிப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் வரிசையானது சுமார் 400 மீற்றர் தூரம் நீண்டு சென்றுள்ளது. இருந்தபோதும் எரிவாயு காலை 8 மணிக்கு பின்னரே வந்து சேர்ந்ததாகவும் வெயிலில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் எரிவாயுவுக்காக விடிய விடிய வீதியில் காத்திருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது ஏமாற்றத்துடன் செல்லும் மக்கள்





மட்டக்களப்பு நகர், பையினியர் வீதியில் எரிவாயுக்காக நேற்று முன்தினம் (26) அதிகாலை 4 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை வெயிலில் எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இருந்தபோதும் 300 பேருக்கு மாத்திரமே எரிவாயு விநியோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் - கனகராசா சரவணன்)





அக்கரைப்பற்றில் அமைந்துள்ள எரிவாயு விற்பளை நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (26) மக்கள் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்தபோது..

(படங்கள் - வி.சுகிர்தகுமார்)

# இலங்கையுடனான ஆளுமைவிருத்தி பங்குடமையை கொண்டாடிய இந்திய உயர்ஸ்தானிகராலயம்







இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை (23) இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் (ITEC) ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் கொண்டாடப்பட்டது.

ITEC பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டவர்கள், இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு பயிற்சிகளில் கலந்துகொண்ட பலதரப்பட்ட துறைகளையும் சார்ந்த உத்தியோகத்தர்கள், இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுகளை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் e-ITEC அமர்வுகளில் கலந்துகொண்டவர்கள் உட்பட கிட்டத்தட்ட 125 விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். அத்துடன் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளிலும் வலுவான நிலையில் காணப்படும் வரலாற்று ரீதியான உறவுகள் தொடர்பாக இங்கு கருத்துகளை முன்வைத்திருந்த அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல, இலங்கையில் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறைகளில் மனித வள அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் ஆதரவை பாராட்டினார்.

அதுமட்டுமல்லாமல் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்காக திறன் விருத்தி மற்றும் தொழில்பயிற்சி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பினை வலுவாக்குவதற்கான ஆர்வத்தினையும் அவர் இங்கு வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றியிருந்த பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், திறன் விருத்தி செயற்பாடுகளில் இலங்கைக்காக இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவானது உலகம் ஒரே குடும்பம் என்ற தத்துவத்தினை சுட்டிக்காட்டுவதாக குறிப்பிட்டிருந்ததுடன், உலகளாவிய ரீதியிலுள்ள நாடுகளில் ஆளுமை விருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இந்தியா தனது உதவிகளை வழங்கி வருகின்றமை குறித்தும் தெரிவித்திருந்தார்.

கொவிட் தொற்றுச் சூழலிலும் இவ்வாறான பயிற்சிகளை தொடர வேண்டும் என்ற நோக்கத்துடன், 2020 ஏப்ரல் முதல் மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக இவ்வாறான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளை அக்காலப்பகுதியில் இலங்கையைச் சேர்ந்த 600 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் குறித்த பயிற்சிகளின் மூலம் நன்மையடைந்துள்ளனர். இப்பயிற்சிகளில் கலந்து கொண்டிருந்தவர்கள் தமது அனுபவங்களையும் இந்நிகழ்வில் பகிர்ந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழான ஓர் இருதரப்பு நிகழ்ச்சித் திட்டமாக இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் (ITEC) 1964ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் மற்றும் ஆளுமைவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகவும் முக்கியமான பணியாக உள்ளது. சிவில் மற்றும் பாதுகாப்புத்துறைகளுடன் தொடர்புடைய பயிற்சிகள் வழங்கப்படும் அதேவேளை கணக்கீடு, கணக்காய்வு, வங்கியியல் மற்றும் நிதியியல் செயற்பாடுகள் முதல் சைபர் தொழில்நுட்பம் வரையிலும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் முதல் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் வரையிலும் மனித வள அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் முதல் ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவம் வரையிலும் ஊடகம் முதல் நகர திட்டமிடல் வரையிலும் கடல் சார் செயற்பாடுகள் மற்றும் விமானத்துறை சார்ந்த பொறியியல் முதல் பெண்களுக்கான மேம்பாடுகள் வரையிலுமான கிட்டத்தட்ட 25இற்கும் அதிகமான துறைகளைச் சேர்ந்த கற்கைநெறிகள் இத்திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், மிக முக்கியமான ITEC பங்காளி நாடுகளில் இலங்கைக்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கையைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையோரின் தொழில் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு வருடமும் பூரண நிதி ஆதரவுடனான 402 ஆசனங்கள் இலங்கைக்காக ஒதுக்கப்படுகின்றன. ITEC குறித்த மேலதிக தகவல்களுக்கு www.itecgoi.in என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

# இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நடமாடும் சேவை





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த வறிய மற்றும் தேவையுடையவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நடமாடும் சேவை ஒன்றினை நேற்று முன்தினம் சனிக்கிழமை மேமன் மனிதாபிமான சங்கம், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, மக்கள் நலன்புரி மன்றம், ஸாஹிராக் கல்லூரியின் 80ஆவது குழும அங்கத்தவர்கள் ஆகிய நான்கு அமைப்புகளும் சேர்ந்து மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தன.

மேமன் மனிதாபிமான சங்கத்தின் தலைவர் ஏ.எல்.அன்வர் ஹாஜி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தின் சுகாதாரப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.ரி.டபிள்யூ. விஜிதகுமார், மக்கள் நலன்புரி சங்கத்தின் தலைவர் அஸீஸ் லக்னா, தேசியத் தலைவர் கரீம் ஜெசீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# முன்னெப்போதும் இல்லாதவாறு அடிமட்ட மற்றும் இருப்புநிலை வளர்ச்சியை பதிவுசெய்துள்ள மக்கள் வங்கி

**★ ரூ. 236.8 பில்லியன் ஒருங்கிணைக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் ரூ. 37.2 பில்லியன் ஒருங்கிணைந்த வரிக்கு முந்திய இலாபம்.**

**★ ஒருங்கிணைந்த வைப்பு அடிப்படை ரூ. 2,168.7 பில்லியனை கடந்துள்ள நிலையில், ஒருங்கிணைந்த கடன் பதிவு ரூ 1,990 பில்லியனை எட்டியுள்ளது.**

**★ தொழிற்றுறையில் மிகப்பெரிய கொவிட் -19 நிவாரணத்தை விரிவுபடுத்துகிறது.**

**★ 2021ஆம் அண்டில் டிஜிட்டல் பரிவர்த்தனையில் ரூ.1.0 ட்ரில்லியனுக்கும் அதிகமாக செயற்படுத்துகிறது.**

**★ இத்தொழிற்றுறையில் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படும் app ஆக People's Wave விளங்குகிறது.**



மக்கள் வங்கியானது 2021ஆம் நிதியாண்டின்போது ஒருங்கிணைந்த மொத்த செயற்பாட்டு வருமானம் ரூ. 110.7 பில்லியனை எட்டியது மற்றும் மொத்த செயற்பாட்டு செலவினங்கள் ரூ. 50.5 பில்லியனை எட்டியது. இதில் 2020ஐ விட முறையே 21.9வீதம் மற்றும் 14.9வீதம் அதிகமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட வரிக்கு முன்னரான மற்றும் வரிக்கு பின்னரான இலாபங்கள் முறையே ரூ.37.2 பில்லியன் ரூ.28.1 பில்லியன். இது 51.1வீதம் மற்றும் 74.6வீதம் வளர்ச்சியைக் குறிக்கிறது.

வங்கியின் தனித்துவமான அடிப்படையில் புள்ளி விபரங்கள் முறையே ரூ.30.4 பில்லியன் மற்றும் ரூ.23.7 பில்லியன், இது 2020ஐ விட 43.2வீதம் மற்றும் 67.3வீதம் அதிகரித்தது. வருமான வளர்ச்சி முதன்மையாக நிகர வட்டி வருவாயில் இருந்து உருவானதாகும். இது மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 90.0வீதத்தினை நெருங்கியது. அத்தோடு வங்கியின் கடன் மற்றும் முதலீட்டுப் பட்டியலின் வளர்ச்சிக்கு ஏற்ப 30.2வீதம் வளர்ச்சியைக் கண்டிருந்தது. அதேநேரம் அதன் கட்டண வருமானம் 23.4வீதமாக அதிகரித்து, ரூ.9.0 பில்லியனை எட்டியது. வங்கியின் நிதியிடா வருமான ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது. செலவு வளர்ச்சி பெரும்பாலும் நேரடி வணிக வளர்ச்சியுடன் தொடர்புடையது. 2019 உடன் ஒப்பிடுகையில், 2020இல் 54.3வீதம் மற்றும் 2019இல் 61.8வீதம் 2021இல் வங்கியின் செலவு மற்றும் வருமான விகிதம் 51.1வீதத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. தொழிற்றுறையில் காணப்படும் நுண்ணிய பொருளாதாரங்களை பிரதிபலிக்கும் வகையில் வங்கி அளவிலான குறைபாடு கட்டணங்கள் அதிகரித்தன.

மேலே சொல்லப்பட்ட அனைத்தும், வங்கியின் ஒருங்கிணைந்த கடன் புத்தகம் 12.1வீதத்தினால் அதிகரித்து, 2021ஆம் ஆண்டின் இறுதியில் 1,990 பில்லியன் ரூபாவை எட்டியதுடன், அதன் ஒருங்கிணைந்த வைப்புத் தொகையின் வளர்ச்சி 12.1வீதமாக, ரூ. 2,168.7 பில்லியனாக இருந்தது.

2021ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்துக்கான மொத்த ஒருங்கிணைந்த வரிகள் மற்றும் ஈவுத்தொகை ரூ. 20.4 பில்லியனாக இருந்தது. இது 2020இல் ரூ. 16.3 பில்லியனாக காணப்பட்டதுடன் 25.1வீதம் வளர்ச்சியைக் கண்டது. அதன் ஒருங்கிணைந்த அடுக்கு I மற்றும் மொத்த மூலதனப் போதுமான அளவு முறையே 13.4வீதம் மற்றும் 17.9வீதமாக 2021 இன் இறுதியில் இருந்தது. (2020: 10.7வீதம் மற்றும் 15.6வீதம்). வங்கியின் தனித்துவமான அடிப்படையில் முறையே 12.6வீதம் மற்றும் 17.8வீதம் (2020: 9.5வீதம் மற்றும் 15.5வீதம்) இவற்றுள் ஒன்று அனைத்து காலத்திலும் நிறுவன ரீதியில் இல்லை. ஆனால் தொழிற்றுறையில் மிக உயர்ந்தது. ஏனைய அனைத்து ஒழுங்குமுறை விகிதங்களும் குறைந்தபட்ச தேவைக்கு மேல் பராமரிக்கப்பட்டன.

கடந்த ஆண்டில் வங்கியானது கிராமிய அபிவிருத்தியில் முதலீடு செய்தது. மேலும் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு (SMEs) ஆதரவளித்ததோடு பெண் தொழில்முனைவோரையும் ஊக்கப்படுத்தியது. 2021ஆம் ஆண்டின் இறுதியில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களினூடாக அதன் வேறுபட்ட கடன் வசதிகள் மூலம் அது ரூ. 63.0 பில்லியன் வரை நீட்டிக்கப்பட்டது. இது ஏறத்தாழ ரூ. 1.9 பில்லியன் உள்ளடக்கியவாறு அதன் திட்டங்கள் மூலம் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், பண்டங்கள் கொண்டு செல்லல், உற்பத்தி, தேயிலை மற்றும் சுற்றுலா என்பவற்றின் வணிக மீள்பார்வைக்கு உதவியது.

சிறு விவசாய வணிக பங்காளிகளுக்காகவே குறைந்த வட்டி வீதங்களைக் கொண்ட கடன் திட்டத்தினைப் பெற்றுக் கொடுத்தது. இது 5000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதுடன் ஆரம்பத் தொகையாக ரூ. 1.0 பில்லியனும் வழங்கப்பட்டது. உள்நாட்டு பசளை தயாரிப்பினை ஊக்குவித்திடும் வகையில் வங்கியானது சரபூமி கடன் வசதித் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தியது. இது ரூ. 535.3 மில்லியன் வகையிலான தொகைக்கு நீட்டிக்கப்பட்டதுடன் பெண் தொழில்முனைவோரையும் மேம்பாட்டுக்கு ஊக்குவித்திடும் வகையில் அமைந்திருந்தது. மேலும் வங்கியானது மேலதிக கடன் திட்டங்களை விவசாயம் மற்றும் கைப்பணி தொழிற்றுறைகளில் சுயதொழில் செய்வோருக்கு உதவிடும் வகையில் அறிமுகப்படுத்தியது.

தனிப்பட்ட கடன் வசதிகள் என பார்க்கும் போது வீட்டு மற்றும் கட்டடத்துறைக்கு வங்கியானது 2021ஆம் ஆண்டில் 10,000க்கும் அதிகமான வீட்டுக் கடன் வதிகளை வழங்கியுள்ளதுடன் அது ரூ. 185.8 பில்லியனுக்கும் அதிகமானதாகும். இதற்கு மேலதிகமாக 2021ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 5.5 பில்லியன் தொகையை இராணுவத்தில் ஊனமுற்ற ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கும், ரூ. 68.5 பில்லியன் தொகையை அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட்டது. கலைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் நிபுணர்களுக்கு உதவிடும் வகையில் ரூ. 550.0 மில்லியன் தொகையை வங்கி வழங்கியுள்ளது. மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவிடும் வகையில் வங்கியானது ரூ. 350.5 மில்லியன் தொகையில் மடிக்கணினிகளுக்கான கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

மக்கள் வங்கியானது நாடளாவிய ரீதியில் 742 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களை கொண்டுள்ள இலங்கையின் மிகப்பெரிய வங்கித்தடம் கொண்ட, நாட்டின் முதன்மை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும். 60 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டதுடன் 14.0மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கும் 19.0 மில்லியன் கணக்கு வைத்திருப்போருக்கும் தொடர்ந்தும் சேவை செய்திடும் 8,000 ஊழியர்களின் பலத்தால் வங்கி பயனடைகிறது. 1961ஆம் ஆண்டு 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இந்த வங்கியானது ("AA- (lka/ Stable") என்ற தேசிய நீண்ட கால மதிப்பைக் கொண்டுள்ளது. இது Fitch Ratings Lanka Ltd இனால் வழங்கப்பட்டதாகும்.

# தினிபிட்டிய வாவியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு



(ஜூட் சமந்த)

மாதம்பை, தினிபிட்டிய வாவியிலிருந்து ஆணொருவரின் சடலத்தை நேற்றுமுன்தினம் மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்மூருவ, பல்லேகெலேவை வசிப்பிடமாகக் கொண்டிருந்த பிரியந்த மஞ்சுள (40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வாவிகளில் ஆபத்தான இடங்களை அடையாளங்கண்டு பொதுமக்கள் நீராடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஸ்ரீகுமார விஜேதுங்க மாதம்பை பொலிஸாரிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

குறித்த வாவியில் கடந்த மூன்று மாதங்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பற்ற 10 இடங்கள் காணப்படுவதாகவும் அங்கு நீராடுவதற்கு தடை விதிக்குமாறு கோரிக்கை விடுத்தபோதும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பொருளாதார நெருக்கடியை வைத்து அரசியல் செய்வதை தவிர்க்க வேண்டும்

## கட்சியிலுள்ளவர்களை திருப்திப்படுத்த மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லையென அலி சப்ரி ரஹீம் எம்.பி. தெரிவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதை விட்டு விட்டு, இதை வைத்து அரசியல் செய்வதை கட்சித் தலைவர்கள் கைவிட வேண்டும் என புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

கற்பிட்டி நுரைச்சோலை ஹாஜராவத்தை ஹஜருல் அஸ்வத் பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (26) மாலை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நுரைச்சோலை ஹாஜராவத்தை ஹஜருல் அஸ்வத் பாலர் பாடசாலையின் ஆசிரியை பாத்திமா ஹகீமா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், நுரைச்சோலை அமைப்பாளர் முஹம்மது ஹஸீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினர் எம்.எச்.எம்.நஜாத் ஆசிரியர் உட்பட ஹாஜராவத்தை மஸ்ஜித் நிர்வாக சபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களும், ஊர் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மேலும் கூறுகையில்,

சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் புத்தளத்தில் வாழும் சிறுபான்மை மக்கள் தமக்கான ஒரு நாடாளுமன்ற பிரதிநிதியைப் பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறு 30 வருடங்களுக்கு பின்னர் தெரிவுசெய்யப்பட்ட என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி அழகு பார்க்கவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்காகவோ மக்கள் தெரிவு செய்யவில்லை.

வீடு, காணி, தொழில்வாய்ப்புகள் என்பவற்றோடு வீதி, மின்சாரம், கல்வி என பின்னடைந்து காணப்படுகின்ற பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் மக்கள் என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

எனவே, எனது மாவட்ட மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது எனது கடமையாகும். மக்களின் எதிர்பார்ப்புகளை புதைத்துவிட்டு கட்சியிலுள்ளவர்களை திருப்திப்படுத்த எனது மனச்சாட்சி இடம்கொடுக்கவில்லை.

எனது கட்சியை விட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி, எனது மாவட்ட மக்களின் அங்கீகாரத்தோடு அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறேன்.

அரசுக்கு ஆதரவு உறுப்பினராக செயற்பட்டு வரும் நாள் முதல் புத்தளம் மாவட்டத்தில் இந்த வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். ஒரு எதிர்க்கட்சியில் பெயரளவில் உறுப்பினராக



இருப்பதை விட, அரசோடு இணைந்து மக்களுக்கு பணியாற்றுவது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் 11 கட்சிகள் பங்கேற்று தமது ஆலோசனைகளை முன்வைத்திருந்தன. 06 கட்சிகள் இதில் கலந்துகொள்ளவில்லை.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் கட்சித் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடுவதற்காகவே இந்த சர்வகட்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனவே, நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் உண்மையான அன்பு கொண்டிருந்தால் அந்த ஆறு கட்சித் தலைவர்களும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றிருப்பார்கள். பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்த நாட்டை பாதுகாப்பது தொடர்பில் தமது ஆலோசனைகளை வழங்கியிருப்பார்கள்.

இது அரசியல் செய்யும் காலம் அல்ல. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் மூன்று வருடங்கள் இருக்கின்றன. ஆகவே, தேர்தல் காலங்களில் அரசியல் செய்யவே வேண்டும். ஆனால், நாடு இன்று பொருளாதார ரீதியாக பாரிய நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது எனத் தெரிவித்தார்.

# பண்டிகைக் காலங்களில் மேலதிக ரயில் பெட்டிகள்

## பயணிகளின் வசதிக்காக நடவடிக்கை

பண்டிகைக் காலப்பகுதியில் சேவையில் ஈடுபடும் ரயில்களில் மேலதிக ரயில் பெட்டிகள் இணைக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அதனை சமாளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்பொழுது நிலவும் ரயில் சாரதிகள் மற்றும் சமிக்ஞை பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக புதிய ரயில் சேவைகளை முன்னெடுப்பதில் தடை ஏற்பட்டிருப்பதாகவும் பிரதி ரயில்வே பொது முகாமையாளர் காமினி செனவிரட்ன தெரிவித்தார்.

# உலக செய்திகள்

## 33ஆவது நாளாக தொடரும் போர்:

# உக்ரைன் படை உக்கிரத் தாக்குதல்: 'ஒப்ஷன் பி'இற்கு மாறிய ரஷ்யப் படை

## டன்பாசை மட்டும் கைப்பற்ற முடிவு



2,500 கி.மீ. தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கியழிக்கும் 'கலிபர்' ஏவுகணை வீச்சு



உக்ரைன் மீது ரஷ்யா இன்று 33ஆவது நாளாகவும் தாக்குதலை தொடர்ந்து வருகிறது. எனினும், ஒரு மாதத்திற்கும் மேலாக ரஷ்யத் தாக்குதல்களால் உக்ரைனின் மரியுபோல் உட்பட பல நகரங்கள் சின்னாப்பின்னமாகியுள்ளன. எனினும், தலைநகர் கீவ்வை கைப்பற்ற முடியாமல் திணறி வருகிறது. உக்ரைன் படைகளின் உக்கிரத் தாக்குதல்களால் தலைநகர் கீவ்வை அண்மித்திருந்த ரஷ்யப் படைகள் பின்வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**புட்டின் அதிகாரத்தில் நீடிக்கக் கூடாது**

இந்நிலையில், ''ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அதிகாரத்தில் நீடிக்கக் கூடாது என்றும் ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரள வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் போலந்தில் நிகழ்த்திய உரையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை விடுத்த அறிக்கையில், "புட்டினை பதவியிலிருந்து நீக்குவது நோக்கமில்லை. அவர் அண்டை நாடுகளின் மீது அதிகாரம் செலுத்துவதைத் தடுக்கவேண்டும்" என்று தான் பைடன் அவ்வாறு பேசியதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

போலந்துக்கான விஜயத்தின்போது அந்நாட்டு ஜனாதிபதி ஆண்ட்ரேஸ் டுடாவை சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அவருடன் பேச்சு நடத்தினார். இதன்போது நேட்டோ கூட்டு நாடுகளை ரஷ்யா தாக்க முற்பட்டால் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் பைடன் உறுதியளித்தார்.

நேட்டோ நாடுகளின் ஒரு அங்குலத்தைக் கூட விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றும் அவர் புட்டினை எச்சரித்தார். நேட்டோ படையை பற்றி புட்டின் தவறான பிரசாரம் செய்து வருவதாக கூறிய பைடன், நேட்டோ தற்காப்பு படைதான், தாக்கும் படை அல்ல என்றார்.

மேலும் போர் தொடங்கிய 31 நாட்களில் முதன்முறையாக உக்ரைன் வெளியுறவு அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடனும் பைடன் போலந்தில் பேச்சு நடத்தினார். முன்னதாக உக்ரைன் அகதிகளை சந்தித்து மனம் உருகிய பைடன் புட்டினை 'கசாப்புக் கடைக்காரர்' என்று சாடினார்.

**'காலிபர்' ஏவுகணைத் தாக்குதல்**

இதேவேளை, 2,500 கிலோமீற்றர் தூரம் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை படைத்த 'காலிபர்' ஏவுகணைகளை, உக்ரைன் மீது செலுத்திய காணொளியை ரஷ்ய இராணுவம் வெளியிட்டுள்ளது.

கடலிலிருந்து செலுத்தப்பட்ட இந்த ஏவுகணைகள் உக்ரைனின் ஜோட்டிமிர் நகரிலுள்ள இராணுவ நிலைகளைத் தாக்கியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**உக்ரைன் உக்கிரத் தாக்குதல்**

இந்நிலையில் உக்ரைன் படைகளின் உக்கிரமான தாக்குதலால் பெரும் உயிர்ச்சேதங்களையும் பொருட்சேதங்களையும் தற்போது ரஷ்யப் படைகள் சந்தித்து வருகின்றன. இந்நிலையில் ரஷ்யா தனது தாக்குதல் திட்டத்தை மாற்றியுள்ளது. தலைநகர் கீவ்வை கைப்பற்றும் முடிவை தற்காலிகமாக கைவிட்டு, கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்ற தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. உக்ரைன் மீது இன்று 33ஆவது நாளாகவும் போர் தொடுத்து வரும் ரஷ்யா, ஆயிரக்கணக்கான வீரர்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள் இழந்தும் தலைநகர் கீவ் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், மரியுபோல் போன்ற முக்கிய நகரங்களை கைப்பற்ற முடியாமல் தொடர்ந்து போரிட்டு வருகிறது. உக்ரைனிலிருந்து இதுவரை 37 இலட்சத்துக்கும் அதிகமான அப்பாவி மக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

உலகிலேயே மிகப்பெரிய இராணுவ அமைப்பு மற்றும் ஆயுதங்கள் கொண்டுள்ள ரஷ்யாவால், உக்ரைனை சுற்றி வளைத்தும் ஆயுதப்படை ஸ்தம்பிப்பால் திணறி வருகிறது. இதை பயன்படுத்தி, உக்ரைன் இராணுவம், ரஷ்யா கைப்பற்றிய ஒவ்வொரு பகுதிகளையும் தற்போது கைப்பற்றி வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகளின் ஆயுத உதவியால், ரஷ்யாவுக்கு எதிரான தாக்குதலை உக்ரைன் தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த நாட்களாக ரஷ்யாவின் பீரங்கிகள், ஏவுகணைகளை உக்ரைன் இராணுவம் சுட்டு வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்துள்ளது.



**ரஷ்யாவின் 7 இராணுவத் தளபதிகள் பலி**

உக்ரைன் மீதான போரில் ரஷ்யாவின் 7 இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை போரில் தங்கள் தரப்பில் 1,300 வீரர்கள் உயிரிழந்ததாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை கிரம்ளின் தெரிவித்துள்ள நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாக இருக்கலாம் என மேற்கு நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

படைகளை முறையாக வழிநடத்தவில்லை என 37ஆவது படைப்பிரிவின் தலைவர், அவரது சொந்தப் படைகளாலே கொல்லப்பட்டதாக உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

**ரஷ்ய போர்க்கப்பல் சேதம்**

தென்கிழக்கு உக்ரைனிலுள்ள பெர்டியன்ஸ்க் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யாவின் போர்க்கப்பலை உக்ரைன் படையினர் குண்டு வீசி தாக்கியதில் அது எரிந்து சேதமடைந்து கவிழ்ந்திருப்பதை காட்டும் செயற்கைக்கோள் படங்களை மேக்சர் டெக்னாலஜீஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

போர்க்கப்பலில் பிடித்த தீ, துறைமுகத்திலிருந்த எரிபொருள் சேமிப்பு தொட்டிக்கும் பரவி, அது பற்றி எரிந்த காட்சியும் அதில் இடம்பெற்றுள்ளது. வீரர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான ஆயுதங்களை தரையிறக்கப் பயன்படும் அலிகேட்டர் வகை போர்க்கப்பலான ஆர்ஸ்க், சுமார் 400 வீரர்களை ஏற்றிச்செல்லும் திறன் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சமயத்தில் உள்ளே அந்நாட்டு படைவீரர்கள் எவரேனும் இருந்தார்களா? எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர் என்பது தொடர்பாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

**பின்வாங்கும் ரஷ்யப் படை**

உக்ரைனின் தரை வழித் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல், ரஷ்ய இராணுவம் பல இடங்களில் பின்வாங்கி வருகிறது. தலைநகர் கீவ்வுக்கு மிக அருகில் வந்த ரஷ்யப் படைகள், தற்போது பல கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கியுள்ளன. பல இடங்களில் ரஷ்ய ஏவுகணைகள் இலக்கை சரியாக தாக்காமல் தோல்வியை தழுவியுள்ளன. ரஷ்ய இராணுவம் இந்த போருக்கு முழுமையாக தயாராகாததே இதற்கு காரணம் என கருதப்படுகிறது. வீரர்களும் போதிய பயிற்சியில்லாமலிருப்பதால், போரில் எளிதாக பலியாகி வருகின்றனர்.

ஆனால், மரியுபோல் நகரத்தை விடாமல் சுற்றுவளைத்து ரஷ்யப் படைகள் தாக்கி வருகின்றன. மரியுபோலிலிருந்து வெளியேறாத இலட்சக்கணக்கான மக்கள் உணவு, தண்ணீர், மின்சாரமின்றி தவித்து வருகின்றனர். உயிர் பிழைத்தால் போதும் என்று எண்ணி, திரையரங்கு உள்ளிட்ட இடங்களில் பதுங்கும் மக்களையும் ரஷ்யப் படைகள் விட்டு வைக்கவில்லை.

இந்நிலையில், உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவிலும் எதிர்ப்பு அதிகமாகி வருகிறது. இந்நாட்டின் முக்கிய பதவிகளிலுள்ள பலர், ஜனாதிபதி புட்டினின் போக்கை கண்டித்து பதவி விலகி வருகின்றனர். போரில் பெரும் உயிர்ச்சேதம், பொருட்சேதத்தை ரஷ்ய இராணுவம் சந்தித்து வருவதால், இந்த எதிர்ப்பு மேலும் அதிகமாகியுள்ளது.

ரஷ்யப் படைகள் கடந்த முதலாம் திகதி கைப்பற்றிய துமி ஓபலாஸ் மாகாணத்திலுள்ள எல்லை நகரம், டிரோஸ்டியாமேட்ஸை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் வசமாக்கியுள்ளன.

இதேவேளை, வடக்கு உக்ரைனில் செர்னிஹிவ் நகரம் ரஷ்யப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அந்த நகரம் மற்றொரு மரியுபோல் ஆக மாறும் நிலையுள்ளது. அங்குள்ள மக்கள் குடிநீருக்கும், உணவுக்கும் பெரும் இன்னலுக்கும் ஆளாகியுள்ளனர். இந்நிலையில் ரஷ்யப் படைகளால் தாக்கப்பட்ட எண்ணெய் சேமிப்பு கிடங்கு மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் குறித்த செயற்கைகோள் புகைப்படம் வெளியாகியுள்ளது.

**ரஷ்யாவின் முக்கிய இரு திட்டங்கள்**

உக்ரைன் போரை முதலில் 2 முக்கிய திட்டங்களுடன்தான் ரஷ்ய இராணுவம் தொடங்கியது.

முதலாவது திட்டம் - உக்ரைன் முழுவதையும் தாக்கி கைப்பற்றுவது.

2ஆவது திட்டம் - ரஷ்ய ஆதரவு பெற்ற கிளர்ச்சி படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தை உக்ரைனின் பிடியிலிருந்து முழுமையாக விடுவித்து தனி நாடாக அறிவிப்பது.

தனது படை பலத்தால் உக்ரைனை எளிதில் வீழ்த்தி விடலாம் என்ற நினைப்பில், அந்நாட்டை மொத்தமாக கைப்பற்ற புட்டின் முதலில் முடிவு செய்தார். அதனால்தான், உக்ரைன் முக்கிய நகரங்கள் அனைத்தின் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

உக்ரைன் இராணுவ பலத்தை குறைக்கும் வகையில், இராணுவ கட்டடங்கள், விமான தளங்கள், அரசு அலுவலகங்கள், அணுமின் நிலையங்கள், துறைமுகங்கள் என அடுத்தடுத்து தகர்த்தது. அடுத்து, மக்களை கொன்று தவிக்க விட்டால், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி சரணடைவார் என்று எண்ணியது. ஆனால், ஸெலென்ஸ்கி தனது நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளார். போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யா முன் வர வேண்டும். ஆனால், அமைதிக்காக உக்ரைன் தனது எந்தப் பகுதியையும் விட்டுக் கொடுக்க ஒப்புக் கொள்ளாது என்று







அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக உக்ரைன் வீரர்கள் உக்கிரமாக போர் புரிந்து வருகின்றனர். இதன் காரணமாக, ஏற்கனவே ரஷ்யப் படைகள் கைப்பற்றியிருந்த பல இடங்கள், மீண்டும் உக்ரைன் படைகளின் கட்டுப்பாட்டுக்கு சென்றுள்ளது. இதற்கு, அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு அளித்துவரும் ஆயுத உதவியே முக்கிய காரணமாக கருதப்படுகிறது. ஒருபுறம் உக்ரைனுக்கு நவீன ஆயுதங்களை கொடுத்து உதவி வரும் நேட்டோ நாடுகள், மறுபுறம் ரஷ்யாமீது அடுத்தடுத்து புதிய பொருளாதார தடைகளை விதித்து மிரட்டி வருகின்றன. ரஷ்யாவின் மிகப் பெரிய பொருளாதார பலமாக இருப்பதே அதன் எண்ணெய், எரிவாயு விற்பனைதான். ஐரோப்பிய நாடுகளின் 40 சதவீத தேவையை ரஷ்யாதான் பூர்த்தி செய்கிறது. தற்போது, அமெரிக்கா நடுவில் நுழைந்து இதற்கு வெடி வைத்து விட்டது.

ஐரோப்பிய நாடுகளுக்கு தேவையான எண்ணெய், எரிவாயுவை தானே விநியோகம் செய்வதாக கூறி, ஒப்பந்தமும் போட்டு விட்டது. ரஷ்யாவுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. தனக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று சேருவதால், புட்டின் ஆட்டம் கண்டுள்ளார். போரிலும் வெற்றி பெற முடியவில்லை. நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கிறது. இந்நிலையில், உக்ரைன் தலைநகர் கீவ்வை கைப்பற்றும் திட்டத்தில் இருந்து ரஷ்யா பின்வாங்கியுள்ளது.

மேலும், முதலில் திட்டமிட்டது போல் 'ஒப்ஷன் பி'யை தேர்வு செய்து, டான்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்றுவதற்கான தாக்குதலை தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளது. 2014ஆம் ஆண்டு முதல் கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பகுதியை சுதந்திர நாடாக அறிவிக்கக்கோரி கிளர்ச்சியாளர்கள் போரிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நவீன முறையில் போர்க் குற்ற ஆதாரங்கள் சேகரிப்பு**

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இயற்றப்பட்ட சர்வதேச போர்க்குற்ற சட்டங்களை ரஷ்யப் படைகள் மீறுவதாக அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் குற்றம்சாட்டி வருகின்றன. குறிப்பாக, உக்ரைனில் பொதுமக்களின் வீடுகளை அழித்தல், மனிதநேய பாதைகளில் வெளியேறும் மக்களை சுடுவது, மருத்துவமனைகளை தாக்குவது, அப்பாவி மக்கள் மீது கொத்து குண்டுகள், ஏவுகணைகளை வீசுவது, மனித உயிரினத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அணுமின் நிலையங்களை தாக்குவது, மக்களுக்கு மனிதாபிமான உதவி, உணவு கிடைக்க விடாமல் தடுப்பது போன்ற போர்க் குற்றங்களில் ரஷ்யா ஈடுபடுவதாக இந்த நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. இந்நிலையில், இந்த குற்றங்களுக்கான வலுவான ஆதாரங்களை திரட்டுவதற்காக இந்த நாடுகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருவதாக நேற்று பரபரப்பு தகவல் வெளியாகியிருக்கிறது. இதில், புட்டினை சிக்க வைக்க இவை வியூகம் வகுத்துள்ளன.

**துருக்கி சமரச முயற்சி**

உக்ரைன் போரை நிறுத்துவதற்கு ஆரம்பத்திலிருந்தே துருக்கி ஜனாதிபதி அர்துகான் முயற்சி செய்து வருகிறார். நேற்றுமுன்தினம் அவர், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசி, சமரச முயற்சி மேற்கொண்டார்.

**தினமும் 500 ஸ்டிங்கர்ஸ் கொடுங்கள்**

ஆப்கானிஸ்தானில் ரஷ்யப் படைகள் 10 ஆண்டுகள் தாக்குதல் நடத்தியபோது, அங்குள்ள முஜாகிதீன் தீவிரவாத அமைப்புக்கு அமெரிக்கா ஆயுதங்களை கொடுத்து உதவியது. இதில், தோளில் சுமந்து சென்று வீசக்கூடிய 'ஸ்டிங்கர்ஸ்' என்ற சிறிய ரக ஏவுகணையும், டாங்கிகளை அழிக்கும் 'ஜாவலின்' ரக ஏவுகணையும் முக்கிய பங்கு வகித்தன. இவற்றை பயன்படுத்தி ரஷ்ய போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், டாங்கிகளை முஜாகிதீன்கள் அழித்தனர். இதனால், ரஷ்ய இராணுவம் போரை கைவிட்டது.

இந்த ரக ஏவுகணைகளைதான் உக்ரைனுக்கும் தற்போது அமெரிக்கா கொடுத்து வருகிறது. ஏற்கனவே, 800 ஸ்டிங்கர்ஸ், 2 ஆயிரம் ஜாவலின் ஏவுகணைகள் அதற்கு கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை பயன்படுத்தி ரஷ்யப் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், டாங்கிகளை உக்ரைன் படைகள் வீழ்த்தியுள்ளன. இந்நிலையில், தினமும் 500 ஸ்டிங்கர்ஸ் ஏவுகணைகளை வழங்கினால், ஆப்கானிஸ்தானை போல் உக்ரைனிலிருந்தும் ரஷ்யப் படைகளை விரட்டியடிப்போம் என இந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கூறியுள்ளார்.



# ஜடேஜாவின் விசித்திர சாதனை

கொல்கத்தா நைட் ரைடஸ் அணிக்கு எதிரான முதல் லீக் போட்டியில் சி.எஸ்.கே. அணியின் தலைவராக ரவீந்திர ஜடேஜா முதல் போட்டியில் விளையாடினார். 2008ஆம் ஆண்டு முதல் ஐ.பி.எல். தொடரில் விளையாடிவரும் ஜடேஜா தற்போது சென்னை அணிக்கு தலைவராக விளையாடி வருவதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் விசித்திரமான ஒரு சாதனைக்கு சொந்தக்காரராகியுள்ளார்.

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக போட்டிகளில் விளையாடியதற்குப் பின்னர் தலைவராக அறிமுகமான வீரர் என்ற சாதனையை தற்போது ஜடேஜா படைத்துள்ளார். 201ஆவது ஐ.பி.எ. போட்டியில் விளையாடி வரும் அவர் ஏற்கனவே 200 போட்டிகளில் விளையாடிய பின்னர் தலைமைப் பதவியை பெற்றார்.

இதன் காரணமாக அதிக போட்டிகளில் விளையாடிய பின்னர் தலைவரான வீரர் என்ற சாதனையை படைத்தார். இவருக்கு முன்னதாக மனிஷ் பாண்டே 153 போட்டிகளில் விளையாடிய பின்னர் ஐ.பி.எல். தொடரில் தலைவராக செயற்பட்டிருந்தார். அந்த சாதனையை தற்போது கடந்த ஜடேஜா தனது 201ஆவது போட்டியில் முதல் முறையாக தலைவராக செயல்பட்டு ஐ.பி.எல். வரலாற்றில் விசித்திரமான சாதனைக்கு சொந்தக்காரராகியுள்ளார்.

**சி.எஸ்.கே. VS கே.கே.ஆர் போட்டியை காண**



# மாலிங்கவின் சாதனையை சமன் செய்த பிராவோ

2022ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய லசித் மாலிங்கவின் சாதனையை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ சமன் செய்தார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த முதல் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடஸிடம் 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தோல்வியடைந்தது. எனினும், ஆட்டத்தில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பிராவோ அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் பட்டியலில் முதலிடத்தில் மாலிங்கவுடன் இணைந்தார். தனது கடைசி ஓவரில் சாம் பில்லிங்ஸின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம், பிராவோ தன்னுடைய 170ஆவது விக்கெட்டை பெற்றார்.

பிராவோ தனது 151ஆவது ஐ.பி.எல். ஆட்டத்தில் இந்த மைல்கல்லை அடைந்துள்ளார். மும்பை இந்தியன்ஸ் அணிக்காக பல ஆண்டுகளாக விளையாடிய மாலிங்க வெறும் 122 ஆட்டங்களில் 170 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார். லசித் மாலிங்க இந்தாண்டு ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவகள்**

லசித் மாலிங்க - 170 விக்கெட்டுகள் (122 போட்டிகள்)
டுவைன் பிராவோ - 170 விக்கெட்டுகள் (151 போட்டிகள்)
அமிட் மிஸ்ரா - 166 விக்கெட்டுகள் (154 போட்டிகள்)
பியுஷ் சவ்லா - 157 விக்கெட்டுகள் (165 போட்டிகள்)
ஹபஜன் சிங் - 150 விக்கெட்டுகள் (160 போட்டிகள்)

# வோர்னுக்கு நினைவஞ்சலி !

கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்களில் ஒருவராகத் திகழ்ந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்னுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடர் நேற்று முன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் ஆரம்பமானது. முதல் போட்டியில் நடப்பு சம்பியன் சி.எஸ்.கே. – கே.கே.ஆர். அணிகள் மோதின. இந்தப் போட்டிக்கு முன்னதாக, கடந்த 4ஆம் திகதி திடீர்




மாரடைப்பு காரணமாக மறைந்த சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு ஐ.பி.எல். சார்பில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

அப்போது, ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதல் ஐ.பி.எல். கிண்ணத்தை வென்ற காணொளியும் மைதானத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு ஷேன் வோர்னுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 'அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளஸ்' கிரிக்கெட் சுற்றுத்தொடர்




**(கந்தளாய் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/அல்-தாரீக் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் 54 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் 'அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளஸ்' கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் அல்-தாரீக் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின் முதல்வ‌ன்' ஏ.கே.நசுர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள் பங்கு பற்றின. இதன் ஆரம்ப நிகழ்வு ஊவலத்தோடு ஆரம்பமானது. நிகழ்வுக்கு பாடசாலையில் கற்பித்த பல முன்னாள் ஆசிரியர்களும், அதிபர்களும் மற்றும் பழைய மாணவர்களும் கலந்துகொண்டாகள். இந்த அழகிய தருணம் ஒவ்வொரு அல்தாரிக்கேயனின் பாடசாலையில் கற்றுக்கொண்டிருந்த அந்த பொற்காலத்தை ஞாபகமூட்டுவதாக அமைந்திருந்தது.

மூன்று நாட்கள் நடைபெற்ற சுற்றுப்போட்டிகள் 8 ஓவர்களைக்கொண்டு அணிக்கு 11 பேரைக்கொண்ட விலகல் அடிப்படையில் அமைந்திருந்ததோடு, 24 அணிகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடின. இறுதிப்போட்டிக்கு 2002ஆம் அணியும், 2008ஆம் ஆண்டு அணியும் ஒன்றையொன்று மோதி 2002ஆம் ஆண்டு அணி 'அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ்' வெற்றிக்கிண்ணத்தினையும், பெறுமதியான பணப்பரிசிலையும் தனதாக்கி 2022ஆம் ஆண்டுக்கான சம்பியன் முத்திரையை பதித்தது.

இந்நிகழ்வின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர், இ.ஜி.பி.ஐ. தமதிலக்க, அல்-தாரிக் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.கே.நசுர், கந்தளாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.தாரீக் (நளிமி), கல்வி அதிகாரிகள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.








# கண்டி பாடசாலை அணிகளுக்கிடையில் ரி–20 கிரிக்கெட் தொடர் ஏற்பாடு

**(கண்டி நிருப)**

இரண்டாவது வருடமாகவும் கண்டி பாடசாலைகளுக்கிடையிலான ரி-20 கிரிக்கெட் தொடர் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. கண்டி ஆசிரி வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இது பற்றிய ஊடக சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

கண்டி மாவட்ட பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகளை பிரபல்யப்படுத்தும் வகையில் இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், இது கே.எஸ்.பி.எல். ரி-20 என அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கான அனுசரணையை 'மிஸ்ட மெக்' நிறுவனம், 'இன்போடெக்' நிறுவனம், ஆசிரி தனியார் வைத்தியசாலை நிறுவனம், மத்திய மாகாண கல்வி அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடுசெய்துள்ளன.

இப்போட்டிகள் எதிவரும் மார்ச் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் கண்டி அஸ்கிரிய சவதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறும். முதலாவது போட்டியில் கட்டுகஸ்தோட்டை ஸ்ரீ ராகுல வித்தியாலயம் மற்றும் தர்மராஜ கல்லூரி என்பன போட்டியிடும். இரண்டாவது போட்டியில் கிங்ஸ்வுட் கல்லுரியும், புனித சில்வெஸ்டஸ் கல்லூரியும் போட்டியிடும். 3ஆவது போட்டியில் வாரியபொல ஸ்ரீ சுமங்கள வித்தியாலயத்திற்கும், கண்டி



திருத்துவக் கல்லூரிக்கும் இடையே இடம்பெறும்.

4ஆவது போட்டி புனித அந்தோனியார் கல்லூரிக்கும், வித்தியார்த்த கல்லூரிக்கும் இடையே இடம்பெறும். அதன் பின்னர் நொக்கவுட் முறையில் வெற்றிபெறும் அணிகளுக்கிடையே அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

மேற்படி தொடரில் பங்குகொள்ளும் 8 அணிகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுவதுடன், வெற்றிபெறும் அணி, இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு கேடயங்கள் பரிசாக வழங்கப்படும்.








மாத்தளை மாவட்ட வரக்காமுறை அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் முதல் முறையாக ஏற்பாடு செய்த அணிக்கு 7 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மாத்தளை லுக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தையும், ரூ. 30 ஆயிரம் பணப்பரிசையும் வென்றது. வரக்காமுறை புலு டொட் விளையாட்டுக் கழகம் ரன்னர்அப் கிண்ணத்தோடு ரூ.20 ஆயிரம் பணத்தொகையை பெற்றுக்கொண்டது. (படங்கள் - மாத்தளை நிருபர்)

# புதிய நம்பர் வன் வீராங்கனையான ஸ்வியாடெக்

மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் போட்டியில் வென்றதன் மூலம் உலகின் நம்பர் வன் வீராங்கனை என்ற புதிய கௌரவத்தை அடைந்தார் போலந்தின் இளம் வீராங்கனை ஐகார் ஸ்வியாடெக்.

அவுஸ்திரேலியாவின் ஆஷ்லி பாடி உலகின் நம்பர் வன் வீராங்கனையாக இருந்த நிலையில், தனது 25ஆவது வயதிலேயே ஓய்வுபெறுவதாக அண்மையில் அறிவித்தார். இந்நிலையில், அடுத்து டபிள்யூ.டி.ஏ. நம்பர் வன் வீராங்கனையாக யார் ஆவார் என எதிர்பார்ப்பு இருந்தது.

தற்போது அமெரிக்காவின் மியாமி நகரில் மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெறுகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்று ஆட்டத்தில் போலந்தின் இளம் வீராங்கனை ஐகார் ஸ்வியாடெக் 6-2, 6-0 என்ற நேர் செட்களில் சுவிஸ் வீராங்கனை விக்டோரி ஜாவை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 20 வயது நட்சத்திரமான ஸ்வியாடெக் உலகின் நம்பர் வன் வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார். இந்த அந்தஸ்தைப் பெற்ற முதல் போலந்து வீராங்கனை ஸ்வியாடெக் ஆவார். ராட்வான்ஸ்கா இரண்டாம் நிலை வீராங்கனை என்ற சிறப்பை பெற்றிருந்தது அதிகபட்சமாகும். கடந்த 2020இல் பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை கைப்பற்றியதின் மூலம் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற போலந்து வீராங்கனை என்ற சிறப்பையும் ஸ்வியாடெக் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# SINGHAGIRI மற்றும் EWIS Colombo இணைந்து இலங்கையர்களுக்கு புதிய தொலைக்காட்சி அனுபவத்தை வழங்குகிறது

## இலங்கை தொலைக்காட்சி தொழிற்றுறையில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கும் வணிக கூட்டாண்மை 2022 மார்ச் 09ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது

இலங்கையின் முன்னணி இலத்திரனியல் உற்பத்தி நாமமான சிங்ஹகிரி (தனியார் நிறுவனம்) மற்றும் இலங்கையில் தரமான இலத்திரனியல் உபகரண உற்பத்தியாளரான EWIS Colombo நிறுவனம் இலங்கையில் இலத்திரனியல் உற்பத்தித்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி SGL தொலைக்காட்சி உற்பத்தியை இலங்கை தொலைக்காட்சி சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இது இலங்கையினுள் தொலைக்காட்சிகளை உற்பத்திசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியாகும். மேலும், இது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுசேர்ப்பதோடு எதிர்காலத்தில் பல வியாபார




முயற்சிகளுக்கான ஆரம்பமாக இதனை குறிப்பிட முடியும். இந்த கூட்டாண்மை ஒப்பந்தத்தில் சிங்ஹகிரி (தனியார்) நிறுவனத்தின் சார்பில் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி மஹேஷி ஆணந்தசிறி மற்றும் EWIS Colombo நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் சஞ்ஜீவ விக்ரமநாயக்க கையொப்பமிட்டனர். அதேபோல் EWIS Colombo நிறுவனத்தின் பொது முகாமையாளர் சாமர சஹாபந்து இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

சிங்ஹகிரி (தனியார்) நிறுவனத்தை அமரர் சுகததாச மாரசிங்ஹ 1972ஆம் ஆண்டு ஸ்தாபித்தார். அதேபோல் இந்நிறுவனமே Samsung விற்பனை நாமத்தை முதல் முறையாக இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. மக்கள் மத்தியில் பிரபலமான பல்வேறு உற்பத்திகளை அவர்கள் சந்தையில் அறிமுகம் செய்துள்ளதோடு, அந்த உற்பத்திகளை நாடளாவிய காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும். 100 காட்சியறைகள், 12 முதன்மை பிளாஸா காட்சியறைகள் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரிவிலக்கு காட்சியறைகள் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் 100இற்கும் அதிகமான விற்பனை முகவர்கள் இதுவரை நடைமுறையில் உள்ளனர்.

தேசிய பொருளாதாரத்திற்கு மற்றும் உள்நாட்டு உழைப்பிற்கு உந்துசக்தியை வழங்கும் ஒரு முக்கிய பணியை சிங்ஹகிரி மற்றும் EWIS மேற்கொண்டு வருகின்றன.

# சம்பத் வங்கி PLC சர்வதேச மகளிர் தினத்தை "Wonder Women Initiative" மூலம் கொண்டாடுகிறது




பெண்களின் சாதனைகள், தலைமைத்துவத்தில் அவர்களின் பங்கு மற்றும் பெண் தலைவர்கள் குறித்து நிலவும் தப்பெண்ணம் குறித்து "Wonder Women Initiative" மூலமான திறந்த மன்ற கலந்துரையாடல் ஒன்றினை சம்பத் வங்கி நடத்தியிருந்தது.

2022ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தின் நோக்கங்களுக்கமைவாக பாலின பாகுபாடு இல்லாத சமூகத்தை நிறுவும் நோக்கத்துடன், பல்வேறு தொழில்களில் பெண் தலைவர்கள் அடைந்த சாதனைகளை இம்மன்றம் அங்கீகரித்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு பெண்கள் அவர்களது தொழில்துறை பயணத்தில் வெற்றியை நோக்கிய அவர்களின் தனிப்பட்ட அனுபவங்களும் இக்கலந்துரையாடலில் பகிரப்பட்டன.

சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் நந்தா பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்: "இந்த மகளிர் தினத்தில் குடும்பம் மற்றும் பெருநிறுவனம் ஆகிய இரண்டினது பொறுப்புகளிலும் சமநிலை பேணி சாதனைகளை வெளிப்படுத்தும் பெண்களை மையமாகக்கொண்ட ஒரு முயற்சியை சம்பத் வங்கி மேற்கொள்கிறது. Women Initiative கலந்துரையாடலானது மிகவும் செல்வாக்கு மிக்க பெண் தலைவர்களை வெளிக்கொணர்ந்தது மட்டுமன்றி அடுத்த தலைமுறைப் பெண் களுக்கான ஊக்குவித்தலையும் வழங்கியது.

# One UI 4 Update நுகர்வோரை மையமாகக்கொண்ட உயர்ந்த Mobile அனுபவத்தை வழங்குகிறது




Samsung Sri Lanka சமீபத்தில் One UI 4ஐ உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியது. இது Galaxy S21, Galaxy S21+ மற்றும் Galaxy S21 Ultra உள்ளிட்ட Galaxy S21 தொடர்களில் முதலில் வெளிவரும் புதிய Customization Options, privacy features மற்றும் Samsung's ever-expanding ecosystem ஆகியவற்றுடன் One UI 4 உங்களை கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் புதிய mobile அனுபவத்தை வழங்குகிறது.

One UI 4 உங்கள் தனிப்பட்ட தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் உங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கும் தனிப் பயனாக்கப்பட்ட mobile அனுபவத்தை உருவாக்க உதவுகிறது. தெரிவுசெய்யப்பட்ட புதிய color palettes முழு host உடன் உங்கள்home screenஇலிருந்து iicons, menu button மற்றும் background வரை எல்லாவற்றின் தோற்றத்தையும் மாற்றலாம்.

வலுவான பாதுகாப்பு அம்சங்கள் இல்லாவிட்டால் அங்கு privacy இருக்காது. அதனால்தான் One UI 4 உடன் Samsung சமீபித்திய privacy & security அம்சங்களைக் கொண்டுவருகிறது

Kevin SungSu YOU, இலங்கைக்கான Samsung முகாமைத்துவப் பணிப்பாளர், ''நியாயமான நடைமுறைப்படுத்தக்கூடிய விரைவாக அனைவருக்கும் கிடைக்கக்கூடிய சிறந்த mobile அனுபவங்களை வழங்க நாம் அர்ப்பணிப்போடு இருக்கிறோம்'' - எனக் கூறினார்.

# அதியுயர் செயற்பாடுமிக்க 17 அங்குல ரயரை உள்ளூரில் தயாரித்து சியெட் புதிய சாதனை

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அதன் ரேடியல் ரயர் உற்பத்தியில் அதி செயற்பாடுமிக்க 17 அங்குல ரயரை உள்ளூரில் உற்பத்திசெய்து புதிய முன்னுதாரணத்தை உருவாக்கியுள்ளது. விளையாட்டு ரக வாகனங்களுக்கான இந்த நடுத்தர அளவு ரயர் இலங்கை வீதிகளில் மிகவும் பிரபலமாகக் காணப்படும் ஹொண்டா வெஸல் ரக வாகனங்களைப்போன்ற வாகனங்களுக்கு மிகவும் பொருத்தமானது.

களனியிலுள்ள சியெட் களனி உற்பத்திச் சாலையில் முற்றுமுழுதாக இலங்கை நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. CEAT Secura Drive SUV 215/55 R17 என்ற இந்த ரயர் இலங்கையில் அதிகூடிய விற்பனை கொண்ட இந்த ரயர் வர்த்தக இலச்சினையை



அதன் பெறுமானத் தொடர் உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

அத்தோடு உலகின் முன்னணி சர்வதேச வர்த்தக இலச்சினைகளுக்கு ஈடான உள்ளூர் உற்பத்திகளைத் தயாரிப்பதன் மூலம் வெளிநாட்டு நாணய சேமிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்ற தேசிய திட்டத்துக்கு இசைவாகவும் இது அமைந்துள்ளது.

# Chas P Hayley நிறுவனத்துக்கு சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான தங்கப்பதக்க விருது



இலங்கையில் தும்பு சார்ந்த பெறுமதிசேர்ந்த உற்பத்தித்துறையில் முதல்வனாக விளங்கும் Chas P Hayley நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான விருது வழங்கும் விழாவில் தும்பு மற்றும் அது சார்ந்த உற்பத்தித்துறையின் பாரியளவிலான பிரிவின் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற மேற்படி விருது வழங்கும் விழாவில் நிறுவனத்தின் கைத்தொழில் முகாமையாளர் பிரதீப் அமரதாச தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

ஆங்கிலேய தொழில்முயற்சியாளரான சார்ள்ஸ் பீ. ஹேர்லியினால் 1876ஆம் ஆண்டு வாசனைத் திரவியப் பொருள் ஏற்றுமதியில் தொடங்கப்பட்ட இத் தொழில்முயற்சியானது, பிற்காலத்தில் தும்பு மற்றும் அது சார்ந்த உற்பத்தித்துறைக்கு காலடி எடுத்துவைத்தது. தற்பொழுது 100% ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட Chas P Hayley நிறுவனம் அமெரிக்கா, தென்கொரியா, இங்கிலாந்து, போலந்து, ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது.

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் 2021ஆம் ஆண்டில் சிறந்த நிதி செயலாற்றுகையை பதிவுசெய்து சாதனை



சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற விருதுகள் பல வென்ற சுகாதார சேவை வழங்குனரான லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், 2021 நிதியாண்டில் தனது பயணத்தில் ஒரு மைல்கல்லை அடைந்து அதன் வரலாற்றில் அதிகூடிய வருமானம் மற்றும் இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் குழுமம் 2020ஆம் ஆண்டில் பெற்ற 6.8 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில் 10 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளதாக கொழும்பு பங்குச்சந்தைக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 2020ஆம் ஆண்டை விட 47% அதிகரிப்பாகும். லங்கா ஹொஸ்ஸ்பிட்டல்ஸ் குழுமம் 2020ஆம் ஆண்டில் பெற்ற 384 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் 2.2 பில்லியன் ரூபா வரிக்குப் பிந்திய இலாபத்தை ஈட்டியுள்ளதோடு, இது கடந்த ஆண்டை விடவும் 06 மடங்கு அளவுக்கு இமாலய அதிகரிப்பாகும்.

"லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் தொடர்ச்சியான வளர்ச்சியானது, எமது ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் கடின உழைப்பிற்கும் அர்ப்பணிப்பிற்கும் வலுவான சான்றாகும். மருத்துவ சேவைகள் மற்றும் சுகாதார முகாமைத்துவத்தின் நவீன தொழில்நுட்பத்தை உள்வாங்கி தரமான சேவைகளை வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டமையே லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்தின் அதீத வளர்ச்சிக்கு பிரதான காரணம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க முடியும். 2021ஆம் ஆண்டில் பல சாதனைகளை முறியடிக்கும் வகையிலான வெற்றிகளை அடைந்ததில் நான் பெருமைப்படுகிறேன்" - என லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்தின் தலைவர் வித்யாஜோதி டாக்டர் பந்துல விஜேசிறிவர்தன தெரிவித்தார்.

# CL Synergy பணிப்பாளர் சபைக்கு புதிய நியமனங்களை அறிவிக்கிறது



உலகளாவிய ரீதியில் தடம்பதித்துள்ள முன்னணி டிஜிட்டல்-மயமாக்கலில் இயக்கப்பட்ட சரக்கேற்றும் தீர்வுகள் வழங்குனரான CL Synergy நிறுவனமானது, அதன் பணிப்பாளர் சபையில் 6 உறுப்பினர்களை நியமிப்பதாக அறிவித்துள்ளது. உரிய ஒப்புதல்கள் கிடைத்தவுடன் ஆரம்ப பொது வழங்கலில் ஈடுபடுதல் மற்றும் அதன் பங்குகளை பட்டியலிடும் அதன் விரிவாக்கத்திட்டத்தின் பின்னணியில் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்திலிருந்து பொது வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக மாற்றம் கொண்டதன் பின்னர் இந்த அறிவிப்பானது விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

CL Synergy Limitedஇன் பணிப்பாளர் சபையில் புதிதாக சேர்க்கப்பட்டவர்களில் தர்ம தீரசிங்க தலைவராகவும், நிரோஷ் டி சில்வா, திலன் விஜேசிங்க மற்றும் சஞ்சய பண்டார ஆகியோர் சுயேச்சை/நிர்வாகம் அல்லாத பணிப்பாளர்களாகவும், உதார விதானகமகே மற்றும் அனுராத சூரியாராச்சி ஆகியோர் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாகவும் கடமையாற்றவுள்ளனர். இந்த நபர்கள் அனைவரும் அவரவர் துறைகளில் அனுபவம் வாய்ந்த தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரஜா அருண வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் கிரிஸ்புரோ

இலங்கையின் முன்னணி கோழி இறைச்சி உற்பத்தியாளரான கிரிஸ்புரோ, வீடற்ற அல்லது அடிப்படை வசதிகளற்ற ஆனால் நிறுவனத்திற்காக கடினமாக உழைக்கும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்காக 2012இல் ஆரம்பிக்கப்பட்ட கிரிஸ்புரோ பிரஜா அருண திட்டத்தை இன்னும் வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதுடன், இந்தத் திட்டத்தின்கீழ் தமது ஊழியர்களின் வீடில்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவும் இதனூடாக முடிந்துள்ளது. பிரஜா அருண திட்டத்தின் மூலம், கிரிஸ்புரோ குழுமத்தின் ஊழியர்களின் வீட்டுத் தேவைகளை நிவர்த்திசெய்ய கிரிஸ்புரோ குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது, அதாவது, 2022 உலக வாழ்விட தினத்தின் கருப்பொருளுக்கமைய, கார்பன் வெளியேற்றம் முடிந்தவரை குறைவாக உள்ள உலகில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டு உரிமையை உறுதிசெய்வதாகும்.

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி, நாட்டின் 77% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர், மேலும்



பெரும்பாலான சமயங்களில், இந்தப் பகுதிகளில் பொருளாதாரம், விவசாயம், கால்நடைகள் மற்றும் மீன்பிடி உள்ளிட்ட முதன்மைத் துறையை மையமாகக்கொண்டுள்ளது.

இவ்வாறு, கிராமப்புறங்களில் முன்னணி நடவடிக்கைகளில் உணவு, நூல் மற்றும் பிற மூலப்பொருட்கள் உற்பத்தி ஆகியவை அடங்கும், வளர்ந்துவரும் மக்கள்தொகைக்கு உணவு வழங்குவதிலும், தொழில்துறைக்கான மூலப்பொருட்களை வழங்குவதிலும் கிராமப்புற மக்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், ஆரம்ப கட்டங்களில் FMCG விநியோகச் சங்கிலிகளுக்கு அவர்களின் முதன்மை பங்களிப்பு இருந்தபோதிலும், பல கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வாழ்க்கை வசதிகள் கூட இல்லை என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டுகிறது.

அந்தச் சூழலில், கிரிஸ்புரோவின் பிரஜா அருண திட்டமானது, நிறுவனத்தின் முதன்மையான பெருநிறுவன சமூகப் பொறுப்புத் திட்டமானது, அதன் தொடக்கத்திலிருந்து, தகுதிவாய்ந்த, சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய ஊழியர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை வழங்குவதில் தனது கவனத்தையும் ஆர்வத்தையும் விரிவுபடுத்தியுள்ளது.

இன்றுவரை, இந்தத் திட்டம் 84 வீடு களை புனரமைத்து, 34 புதிய வீடுகளை அமைத்து, கிரிஸ்புரோ ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.